www.padippakam.com

உலகத் தமிழர்களிடையே உலாவரும் இதழ் ... !

# இனிய நந்தவனம்

மக்கள் மேம்பாட்டு மாத இதழ்

செப்டம்பர் 2006 ரூ. 5.00



## இலக்கியம் மக்களுக்காகவே...

– ஈழத்து எழுத்தாளர். த. சிவசுப்பிரமணியம்



## தலைவர் என்பவர் தலைமைத் தொண்டனாக இருக்க வேண்டும்...

– ஸ்டாலின் குணசேகரன்

நேர்காணல்

படிப்பகம்

www.padippakam.com

# இலண்டன் சுடரொளி

**சுடரொளி** - தமிழ், சமய, இலக்கிய, கலை, கலாச்சார, தமிழ் அறிஞர்களின் வரலாற்றுப் பதிவு போன்றவற்றைத் தாங்கி இலண்டனில் இருந்து இருமாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் சர்வதேச சஞ்சிகை.

**சுடரொளி** - ஈழ, இந்திய, சிங்கப்பூர், மலேசியத் தமிழர்கள் உள்பட உலக அளவில் பரந்துவாழும் தமிழ் மக்களின் கலாச்சார இணைப்புப் பாலமாக விளங்குகிறது.

**சுடரொளி** - தமிழர்கள் வசிக்கும் உலக நாடுகள் பலவற்றில் விநியோகமாகிறது. சந்தாதாரர்களும் உள்ளனர்.

**சுடரொளி** - பல நூல் நிலையங்களைச் சென்றடைகிறது. இது ஒரு காத்திரமான இலக்கிய ஏடு. பாதுகாத்துப் பேணவேண்டிய அறிவுப் பொக்கிசம்.

**சுடரொளி** - இன்னும் சிறப்பாக வெளிவர உங்களுடைய ஆதரவு தேவை. சந்தாதாரர்களாகவோ அல்லது உங்களுக்குப் பிடித்த வேறு வழிகளிலோ ஆதரவு தந்து உதவுங்கள்.

ஆசிரியர்கள் :

**பொன். பாலசுந்தரம், ஐ.தி. சம்பந்தன்**

**தொடர்புக்கு :**

**CHUDEROLI PUBLICATION SOCIETY,**

**15, Rutland Road, London E7 8 PQ, United Kingdom**

**Tel : 0044 208 552 6992 / Mob : 07957 666 598**

**Email : itsampanthan @ hotmail.com**

**Website : www.chuderoli.org.uk**

படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியர்
த. சந்திரசேகரன்
இணையாசிரியர்கள்
தன்னம்பிக்கை லெனா
சி. சங்கீதா
ஆலோசகர்
புலவர். தியாகசாந்தன்
நிழல்படக் கலைஞர்கள்
விஜயகுமார், நாராயண்
நிருபர்கள்
கவிஞர் ஏகலைவன்,
பாரதிகிருஷ்ணன்

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 60 /- |
| இரண்டாண்டுக் கட்டணம் | ரூ. | 120 /- |
| புரவலர் கட்டணம் | ரூ. | 1,000 /- |

**வெளிநாடுகளுக்கு**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 10 US டாலர் |
| இரண்டாண்டுக் கட்டணம் | 20 US டாலர் |
| புரவலர் கட்டணம் | 200 US டாலர் |

வரைவோலை (DD) அனுப்புவோர்
MAKKAL MEMPATTU CHARITABLE TRUST
என்ற பெயரில் அனுப்பவும்.
பணவிடை (M.O.) அனுப்புவோர்
ஆசிரியர், இனிய நந்தவனம்
என்ற பெயரில் அனுப்பவும்.

அனைத்து தொடர்புக்கும்
இனிய நந்தவனம்
எண்.5, புதுத்தெரு, CSI மருத்துவமனை எதிரில், உறையூர், திருச்சி - 620 003.
INIYA NANDAVANAM
5, New Street, Opp. CSI Hospital,
Woraiyur, Trichy - 620 003.
Tamil Nadu, South India.

ஆசிரியர் : 94432 - 84823
இணையாசிரியர் : 98431 - 91648

## நுழைவாயில்...

கொடி : 3 மலர் : 12

அன்பான வாசகர்களே.... வணக்கம்.

ஈழத்தில் முல்லைத்தீவு செஞ்சோலை சிறார் இல்லம் மீது இலங்கை இராணுவம் நடத்திய குண்டு வீச்சில் 61 சிறுமிகள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

குழந்தைகளின் மீது கோபத்தைக் காட்டுவதற்கு இந்த மூடர்களுக்கு எப்படி மனம் துணிந்தது? பெற்றோரை இழந்து ஆதரவற்ற சிறுமிகள் வளர்க்கப்படும் இடம் செஞ்சோலை என்பது உலகம் அறிந்த உண்மை. யுனிசெஃப் மற்றும் பல்வேறு நாட்டுத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் செஞ்சோலைக்கு வருகைதந்து பாராட்டி இருக்கிறார்கள்.

இலங்கை அரசுக்கு இந்த உண்மை தெரியாதா? அப்படி என்னதான் கோபம் என்றாலும் ஒன்றுமறியாத பிஞ்சுக் குழந்தைகளைக் கொன்று குவிப்பது எந்த விதத்தில் நியாயம்.

இதுகுறித்து தமிழக சட்டப்பேரவைத் தலைவர் இக்கொடுமையைக் கண்டித்து உயிரிழந்த 61 குழந்தைகளின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வரவேற்கத்தக்கது.

அஞ்சலியுடனும், தீர்மானத்துடனும் நின்றுவிடாமல் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு கலைஞர் அவர்களின் குரல் இன்னும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உலகத் தமிழர்களின் மத்தியில் மேலோங்கி இருக்கிறது.

கலைஞர் சிந்திப்பாரா....?

— ஆசிரியர் குழு.

**அறிவிப்பு :**

**இனிய நந்தவனம் முகவரி மாற்றம்**
**இனிய நந்தவனம்**
எண்.5, புதுத்தெரு, CSI மருத்துவமனை எதிரில், உறையூர், திருச்சி - 620 003.
INIYA NANDAVANAM
5, New Street, Opp. CSI Hospital, Woraiyur, Trichy - 620 003. Tamil Nadu, South India.


email : nandavanam04@rediffmail.com
படிப்பகம்

இலக்கியச் சிந்தனை



# அறியாமை நோய் தீர்க்கும் மருந்து

– விக்னா பாக்கியநாதன், ஜேர்மனி.

ஒருவர் தம் வெளித்தோற்றத்தை அழகாக வைத்திருப்பது அழகு அல்ல. தம் தலைமுடியைத் திருத்தியோ, வாசனைப் பொருட்கள், மஞ்சளைப் பூசியோ, விலை உயர்ந்த நாகரீக ஆடைகளையோ அணிந்து தம்மை அலங்கரித்துக் கொண்டால் அது உண்மையான அழகு எனக் கூற முடியாது. நாம் நடுவுநிலைமையுடன் நல்லவளவற்றைச் செய்து நல்ல வழியில் வாழ்கின்றோம் என எண்ண வைக்கும் அறிவினைக் கொடுக்கும் கல்வியழகே உண்மையான, நிலையான அழகு ஆகும்.

கல்வியானது இப்பிறப்பிலும் நன்மையைத் தரும். பிறருக்கு கொடுத்தால் குறையாது, மேலும் கூடும். ஒருவரைப் பற்றி பலரும் அறியச் செய்யும், என்றும் அழியாது. மரணபரியந்தம் கூட வரும், மனிதனை மனிதனாக வாழச் செய்யும் கல்விதான் ஒருவரின் அறியாமையை நீக்கும். எனவே அறியாமையை நீக்கும் அரிய மருந்து கல்வி எனலாம். களர் நிலத்திலே உருவாகும் உப்பைச் சான்றோர் நன்செய் நிலத்தில் விளைந்த நெல்லைவிட உயர்வாகக் கருதுவர், இதுபோல கீழ்க்குலத்தில் பிறந்து கல்வி கற்ற அறிவுடையோரைச் சான்றோர்கள் உயர்வாகவே மதிப்பர்.

கல்வியை ஒருவரிடமிருந்து மற்றவர் ஒருபோதும் கவர்ந்துவிட முடியாது. தாமே விரும்பிக் கொடுத்தாலும் அதாவது கற்பித்தாலும் ஒருபோதும் குறையாது. யாரும் வெருட்டி, அதட்டி, அடித்துப் பறிக்கவும் முடியாது. எனவே ஒருவர் தம் மக்களுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய பொருள் கல்வியாகும். அதாவது தம் மக்களைக் கல்வியில் சிறந்தோங்க வைப்பதே முக்கிய கடமையாகும். கல்வி கரை இல்லாதது. கற்பவர் வாழ் நாளோ மிகச் சிலவாகும். இன்னும் நோக்கினால் இந்நாட்களில் நோய், துன்பம் என்று பல கழிந்துவிட மிகுதியாக உள்ளவை இன்னும் சொற்ப நாட்களே. இந்நாட்களில், 'அன்னப்பறவை' நீரை விலக்கிப் பாலை அருந்துவது போல, ஆராய்ந்து நல்ல நூல்களைக் கற்க வேண்டும்.

குற்றமற்ற நல்ல கல்வி அறிவுடையவர்கள் எவரையும் பகையாக எண்ணமாட்டார்கள். குற்றம் செய்பவர்களின் மனோ நிலையைப் புரிந்து மன்னிப்பு வழங்கத் தயாராக இருப்பார்கள். இப்படியான சான்றோர்களிடம் ஒன்றாகக் கூடிச் சேர்ந்திருப்பது தேவலோகத்தைவிட



விழிப்பதற்கே உறக்கம் ; வெல்வதற்கே தோல்வி ; எழுவதற்கே வீழ்ச்சி.

படிப்பகம்

www.padippakam.com

மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும். அத்துடன் சான்றோர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் நட்பு பழகப் பழக இனிக்கும். இந்த நட்பு கரும்பை நுனியிலிருந்து அடிநோக்கி உண்பதைப் போன்றதாகும். அதாவது ஆரம்பத்தில் மெல்ல மெல்ல இனித்து, அடிக்கரும்பை உண்ணும் நிலைவரும்போது கூடுதலாக இனிக்கும். இதுபோல் சான்றோர் நட்பு ஆகும். மிகுந்த வாசனையுடைய பாதிரிப்பூவைத் தண்ணீருள்ள பானைக்குள் கொய்துவைத்தால் நல்ல வாசனை எங்கும் பரவுவதைப் உணரலாம். அத்துடன் அப்பானையில் உள்ள தண்ணீரும் பாதிரிப்பூவின் நறுமணத்தை தாங்கி நிற்கும். இதுபோல கல்வி கற்காதவரும் கற்றவரோடு சேர்ந்து பழகினால் நல்லறிவு பெற்றுவிடுவார்கள் எனலாம்.

அறிவுக்கு விருந்தாகும் நூல்களைக் கற்காமல், வெறும் பொழுது போக்காகவும், சுவராஸ்யத்துக்காகவும் கண்ட கண்ட நூல்களைக் கற்பதால் எந்தவித பயனும் இல்லை. மாறாகத் தீமையே உருவாகும். இந்நூல்களைக் கற்பதால் ஏற்படும் அறிவு நம்மை நல்ல வழியில் வாழ வைக்கமாட்டாது. மனத்தில் தடுமாற்றம், சஞ்சலம் ஏற்படும்போது பொழுதுபோக்கு, இன்பத்துக்காகக் கற்கும் நூல்கள் ஒருபோதும் துணை செய்ய மாட்டா. இவ்வாறாக கல்வியின் சிறப்புப் பற்றி நாலடியார் வெகு நாசுக்காகக் கற்பித்துள்ளார். எனவே நாலடியார் கூறும் நல்ல நூல்களை நாமும் தேடிக் கற்று உலகிலே அழகாகத் தோற்றமளிப்போம். கல்வியழகால் மற்றவர்களை ஈர்த்து, வாழ்நாளை பயன்படுத்தி பயனுள்ளதாகக் கொள்வோமாக!

அட்மிஷன் நடைபெறுகிறது
சாதனையாளர்களின் சங்கமம்
ஆக்ஸ்போர்டு
கேட்டரிங் காலேஜ்
குறைந்த கட்டணம்
தரமான பயிற்சி
100% வேலை வாய்ப்பு
இந்திய மற்றும் தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது.
மலேசிய ஆப்டிமா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.
புதிய பேருந்து நிலையம் (மாடியில்)
புதுக்கோட்டை - 1.
போன் : 04322 - 232299 செல் : 94431 - 12006
கடந்த வருடம் எங்களிடம் படித்த மாணவர்கள் அனைவரும் வேலை பெற உள்ளனர்.



முயற்சி உடையோருக்கு வறுமை ஒரு தடையல்ல.

படிப்பகம்

www.padippakam.com





# “தலைவர் என்பவர் தலைமைத் தொண்டனாக இருக்க வேண்டும்”

அரசியல்கட்சி சார்பற்ற பொதுநல அமைப்பான மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவரும், ‘விடுதலை வேள்வியில் தமிழகம்’ என்ற தொகுப்பின் நூலாசிரியரும், பரந்துபட்ட சிந்தனையாளருமான திருமிகு. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுடன் ஈரோட்டில் நடந்த புத்தகத் திருவிழாவின் கோலாகலத்தில் இனிய நந்தவனத்திற்காக இளைப்பாறியதிலிருந்து...

✤ குடும்பப் பின்னணியும், சூழலும் தங்களது முயற்சிக்கு உரமேற்றினவா?

எனது குடும்பமே பொதுவுடமை இயக்கத்தைச் சார்ந்தது என்பதால் என் தந்தையுடன் அடிக்கடிக் கூட்டங்களுக்குச் செல்வேன். அதனால் சிறுவயதிலேயே சமூக ஈடுபாடு வந்து விட்டது. எனது ஒவ்வொரு முயற்சிக்கும் எனது தந்தையே தோள் கொடுத்தார். என் சிந்தனைக்கும், கருத்தோட்டத் திற்கும் வீட்டில் முழு ஒத்துழைப்பு கிடைத்தது. பொதுவாழ்விலே எனக்கு பிள்ளையார் சுழி போட்டவர் என் தந்தை.

✤ எப்பொழுதிலிருந்து சமூகத்தோடு தங்களைப் பிணைத்துக் கொண்டீர்கள்?

ஈரோட்டிலுள்ள மாணிக்கம் பாளையம் என்ற கிராமத்தில் பிறந்தேன். இப்போது அது நகரமாக பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. எனக்கு 10 வயதாக இருக்கும்போது 32 மாணவர்களை வைத்து மாணவர் முன்னேற்றச் சங்கம் என்ற அமைப்பைத் தொடங்கினேன். இவ்வமைப்பு 2 ஆண்டுகள் செயல்பட்டது. பின்னர் மாணவரல்லாத வேலைக்குச் செல்கிற இளைஞர்களை இணைத்து பாரதி இளைஞர் மன்றம் துவங்கப்பட்டது. குழந்தைகளுக்கானக் குட்டிக் கதைகள் அடங்கிய புத்தகங்கள் பெரிய பெரிய எழுத்துக்களில் இருக்கும். தொடக்க நிலையில் மற்றவர்களுக்குக் கதை சொல்வதின் வாயிலாகத்தான் புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தேன். தாத்தா, பாட்டிகளுக்கே கதை சொல்கிற நிலை வந்தது. இப்படியாக 36 ஆண்டுகள் தொடர்ந்து இடையறாது பல்வேறு அமைப்புகளை நிறுவியும், ஒருங்கிணைத்தும் செயல்பட்டு வருகிறேன்.

✤ பாரதி இளைஞர் மன்றத்தின் செயல்பாடுகள் எவ்வாறானவை?

நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். வெறுமனே மேற்பார்வை செய்து உழைப்பைப் பெறுவதைவிட நேரடியாக உழைப்பைச் செலுத்த வேண்டும் என்று விரும்புவேன். சிறு வயதிலேயே பெட்டர்மாக்ஸ் லைட்



எவ்வித தியாகமும் செய்யாமல், எவ்வித நன்மையும் பெற முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

வைத்து கல்லைத் தூக்கிக் கொண்டு வேறொரிடத்தில் போடுவது, முட்ச் செடிகளை அகற்றுவது, என இரவு 11 மணிக்கு மேலாக வேலை செய்து விட்டு வீட்டுக்குச் செல்வேன். மற்ற பெற்றோர்களைப் போல இந்நேரம் வரை என்ன பண்ணின? என்று அதட்டாமல், நாளைக்குப் பள்ளிக் கூடம் இருக்கு, வீட்டுப்பாடம் படிச்சாச்சா? என்று திட்டவோ செய்யாமல் மகிழ்ச்சி அடைந்து ஊக்கப்படுத்தியதுதான் எனக்கான உத்வேகமாக இருந்தது. அதற்காக கல்வியில் சோடை போகவில்லை. பாரதி மன்றத்தில் பாரதி விழாவினை நடத்துவது, குழந்தைகளுக்கானப் போட்டி வைப்பது என்று செயல் பட்டோம். செலவுகள் எல்லாவற்றையும் மன்ற இளைஞர்களே ஏற்றுக் கொண்டோம்.

✤ *சிறுவயதிலேயே தலைவராக செயல் பட்ட அனுபவம் எப்படியிருந்தது?*

தலைமை ஏற்பதென்றால் நீ அதைச் செய், நீ இதைச் செய் என்று கூறுவதல்ல. தலைவர் என்பவர் தலைமைத் தொண்டனாகவும் செயல் படுபவனே என்ற சிந்தனை சிறு வயதில் இருந்து இன்றுவரை இருக்கிறது. தலைவர் என்பவர் தனித்த மனிதரல்லர். அதற்கு மாறாக மிகச் சிறந்த முறையிலே ஊழியம் செய்பவர். நேரடியான உழைப்பைச் செலுத்துபவர்.

✤ *சிறுவயதில் பொதுக்கூட்டத்தில் பேசிய அனுபவம் பற்றி சொல்லுங்களேன்?*

சிறுவயதில் ஏராளமான பொதுக் கூட்டங்களிலும், மேடைகளிலும் பேசி


**NGOs-தொண்டு நிறுவனங்களின் கவனத்திற்கு**

★ தொண்டு நிறுவனங்கள் புதிதாய் நிதி பெற்றிட
★ அரசு அல்லது வெளிநாட்டு நிதி கொடையாளர்களிடம் நிதிபெற
★ திட்ட அறிக்கைகள் சிறப்பாகத் தயார் செய்திட
★ மத்திய மாநில அரசு திட்டங்களைப் பற்றி அறிந்திட
★ தொண்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள், பதிவுபெற்ற சங்கங்கள், திறம்மிக்க பல ஆண்டுகள் அனுபவம்பெற்ற ஆலோசகரின் சேவையை பயன்படுத்துவீர்!

**T. எழிலன்,** M.B.A., NGO Consultant
36/2, ஆதித்யா நகர், சட்டநாதபுரம்,
சீர்காழி - 609 109. தமிழ்நாடு.

**For Contact : Cell - 9360627476, 9842555267**




யார் சொல்வது சரியென்பது முக்கியமல்ல ; எது சரி என்பதே முக்கியம்.

படிப்பகம்

www.padippakam.com

யிருக்கிறேன். ஆனால் அப்பொழுதே மேடையில் பேசுவதாய் இருந்தாலும் கூட, வால் போஸ்டர் ஒட்டுவது, தட்டிகள் கட்டுவது, கூட்டங்களுக்கு பேச வருபவர்களின் பெட்டிகளைத் தூக்கிச் செல்வது, தேநீர் வாங்கி வருவது போன்ற வேலைகளையும் எந்த கூச்சமின்றி மலர்ச்சியுடன் செய்வேன். அதாவது, ஒரு கடைநிலை ஊழியனாய் சந்தோஷமாக அனைத்து வேலையையும் செய்வேன்.

✤ *அப்பொழுது படித்த பத்திரிகைகள் பற்றி கூறுங்களேன்?*

நான் முதலில் படித்த பத்திரிகை ஜனசக்திதான். எதையும் நான் தேடிப் போவதில்லை. எனது சூழல் அவ்வாறாக அமைந்திருந்ததே அதற்கு காரணம். அன்றைய தலைவர்கள் பாடப்புத்தகங்களைவிட பாடம் சொல்லித்தரும் மனிதர்களாக இருந்திருக்கிறார்கள். தலைவர்கள் நடந்துகொள்ளும் முறையே மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. தா. பாண்டியன், எம். கல்யாணசுந்தரம் போன்றோரின் பெயர் ஏற்படுத்திய தாக்கம், அவர்களை நேரில் பார்க்கும் போது அவர்களின் எளிமை வியப்பாகத் தோன்றியது.

✤ *தலைவர்கள் சாதாரணமாக நடந்து கொண்டது ஈர்ப்பை ஏற்படுத்தியதா?*

மகத்தான மனிதர்களை நேரில் பார்க்கும் பாக்கியம் கிடைத்ததில் நான் கற்றுக் கொண்டது, அவர்களிடம் கொஞ்சமும் தலைக்கனம் இல்லை. தான்தான் என்ற அகங்காரம் இல்லை. அவர்களது பெட்டியை தூக்கினால், சின்னப் பையன் கரங்களில் சுமையா? என்று தங்களது சுமைகளைத் தாங்களே எடுத்துக் கொள்வார்கள். தலைவர் என்றால் 10பேர் புடைசூழ வந்திறங்கியவுடன் ஒரு கூட்டமாய் மாலையணிவிக்க என்று சினிமாவிலும், மற்ற இடங்களிலும் பார்த்துப் பார்த்து பழகியதில் இருந்து இவர்கள் வித்தியாசமாக நடந்து கொண்டது எனக்கொரு ஈர்ப்பை ஏற்படுத்தியது. பெரிய மனிதர்களெல்லாம் அடக்கமாக இருப்பதைப் பார்த்து, இயல்பாகவே எனக்கும் அடக்கம் வந்துவிட்டது.

✤ *பாரதி, பகத்சிங் என்ற அமைப்புகளில் இருந்து மாறுபட்டு மக்கள் சிந்தனைப் பேரவை தோன்றியது எப்படி?*

பாரதி இளைஞர் மன்றத்தில் இலக்கியம் மட்டுமே இருந்தது. பாரதியே ஒரு ஸ்பிரிட்தான். இன்னும் ஸ்பிரிட் வேண்டுமென்று நினைத்தேன். மேலும், பகத்சிங் இளைஞர் மன்றத்தில் ஒலிம்பிக் ஜோதியை சின்னமாக வைத்திருந்தோம். தியாக ஜோதி என்பது அதன் பெயர். ஒவ்வொரு கிராமமாகச் சென்று தலித் மக்களுக்காக போராடுவோம். இரண்டு, மூன்று நாட்களுக்கும் மேலாக அங்கேயே தங்கியிருந்து வேலை செய்வோம். பகத்சிங் இளைஞர் மன்றம் ஈரோட்டில் மிகப் பெரிய அளவுக்கு பிரபலமாகியது.

பாரதி, பகத்சிங் என்று தனித்தனி அமைப்பாக வைத்துக் கொள்வதைவிட எல்லாத் தலைவர்களையும் சேர்த்து ஒரே அமைப்பாக மாற்ற முடிவு செய்து மக்கள் சிந்தனைப் பேரவையைத் தோற்றுவித்தோம். மக்கள் சிந்தனை பேரவை தொடங்கி 10 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதற்கான வித்து விழுந்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டது.



படிக்கக்கூடாத நூல்களை படிப்பவனும் அறிவிலியே.

படிப்பகம்

www.padippakam.com

✤ மக்கள் சிந்தனைப் பேரவையின் தொடர்ச்சியான நிகழ்வுகள் என்னென்ன?

ஒவ்வொரு ஆண்டு மார்ச் 23ம் தேதியன்று பகத்சிங் தூக்கிலடப்பட்ட முக்கிய நிகழ்வினை நாடகமாக காண்பித்து, அதைப்பற்றி பேசுவது என்று பெரிய அளவில் ஒரு ஸ்பிரிட்டை ஏற்படுத்துகிறோம். நாட்டுப்பற்று மிக்கவர்களுக்கு இது நெஞ்சிலிட்ட நெருப்பு மாதிரி. டிசம்பர் 11ல் பாரதி விழாவினை ஏற்பாடு செய்து பாரதி விருது வழங்கும் விழாவாக மட்டுமின்றி பெரிய கருத்தரங்கமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு செயல் படுகிறோம். பிரம்மாண்டமான நிகழ்ச்சி மூலம் மக்கள் மனதில் நல்லதொரு சிந்தனையை விதைக்கச் செய்கிறோம்.

✤ உலக எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு தங்கள் அமைப்பின் செயல்பாடு எத்தகையது?

உலக எழுத்தறிவு தினமான செப்டம்பர் 8ல் வீடுவீடாகச் சென்று நூலக உறுப்பினர்களைச் சேர்க்கிறோம். இதுவரை 1200 பேர் எங்கள் ஊர் நூலகத்தில் உறுப்பினர் களாக சேர்ந்து இருக்கிறார்கள். இதுவரை 10,000க்கும் மேற்பட்ட நூல்களை நூலக மையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருக் கிறோம். அன்றைய தினம் மட்டு மின்றி அனைத்து நாட்களிலும் நூலகத்திற்கு வருவோரின் எண்ணிக்கையைப் பெருக்கும் விதமான செயலாக்கங்களை மேற்கொள்கிறோம். மாணிக்கம் பாளையத்தை தத்தெடுத்து அக்கிராமத்தை முன்மாதிரி கிராமமாக மாற்றுவதற்கான நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகிறோம்.

✤ மாணிக்கம் பாளையத்தை முன் மாதிரி கிராமமாக மாற்றுவதற்கு வேறென்ன முயற்சி மேற் கொண்டு வருகிறீர்கள்?

அனைத்து வகையிலும் முன்னேற்ற வேண்டும். இன்னும் 6 ஆண்டு களுக்குள் 10ம் வகுப்பிற்குக் கிழ் படித்தவர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்குவதென்றும், வீட்டுக்கு ஒரு நூலகம் அமைக்க வேண்டுமென்றும், நீர், கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் ஆகியவற்றில் தன்னிறைவு பெற்ற கிராமமாக முன்னேற்ற வேண்டுவதற்கான செயல்களைச் செய்து வருகிறோம்.

✤ உங்களைப் பாதித்தவர்கள் பற்றி கூறுங்களேன்?

பெண் பகத்சிங் என்றழைக்கப்படும் கல்பனாதத் அவர்களை 1986ல் பாட்னாவில் சந்தித்தேன். அவரது வாழ்க்கை வரலாற்றை அவரது வாய்மொழி வழியாகவே தெரிந்து கொண்டேன். வாழும் வரலாறுகள்







படிப்பகம்

www.padippakam.com

இருக்கும்போது நாம் ஏன் புத்தகத்தை தேட வேண்டும். முதலில் அவர்களைத் தெரிந்து கொண்டு பின்னர் புத்தகத்தைப் படிப்போம் என்று எண்ணினேன். நேதாஜியின் படைத் தளபதிகளுள் ஒருவரான கேப்டன் லட்சுமி பாயை கான்பூரில் சந்தித்து உரையாடினேன். சிறுவதி லிருந்தே தா. பாண்டியனின் பேச்சைக் கேட்டிருக்கிறேன். ஆற்றொழுக்கமான சொற்பொழிவு. இவர்கள்தான் என்னைப் பாதித்தவர்கள் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு கட்டத்திலும் செயலிலும் பாதித்த வர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

✤ இன்றைய இளைஞர்கள் செல்லும் பாதை எப்படியிருக்கிறது?...

அவர்கள் தனக்கான பாதையைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்துகொண்டு அதன்படி செயல்படுகிறார்கள். ஆனால் சமூகத்திற்காக, தனது பங்கைச் செலுத்த தவறுகிறார்கள். தான் முன்னேறுவதில் முனைப்புக் காட்டு கிறார்கள். அது பாராட்டுக்குரியதே. அதோடுகூட சமூக சிந்தனை அவர் களுக்கு உருவாக வேண்டும். திட்ட மிட்டு செயல்படுகிறார்கள். சொல்லும் விதத்தில் சொன்னால், வழிநடத்தும் விதத்தில் வழி நடத்தினால் இளைஞர்கள் மிகச் சிறந்த முறையில் தேசத்தைப் பாதுகாக்கச் செய்து முன்னேற்ற முடியும்.

✤ இளைஞர்கள் கவர்ச்சி கண்ணியில் சிக்குகிறார்களே?

ஒரு உதாரணம் சொல்கிறேன். டாக்டர் அப்துல்கலாம் ஒரு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு உரையாற்ற வருகிறார். அவர் வருவது உள்ளரங்க திரையில் தெரிகிறது. அரங்கில் இருக்கின்ற அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் செய்தனர். உள்ளே வந்து அவர் இருக்கையில் அமர்ந்த பின்னரே மற்றவர்கள் அமர்ந்தனர். குடியரசுத் தலைவர் என்பதலா? சிறப்பு விருந்தினர் என்பதலா?... இல்லை... அவர் மீது இளைஞர்களுக்கு இருக்கிற கவர்ச்சி என்னவெனில் இந்தியா 2020ல் மிக உயர்ந்த உச்சத்திற்கு வரும் என்ற நம்பிக்கையை விதைத்ததே ஆகும். நம்பிக்கை, நாட்டுப்பற்று, சமூகச் சிந்தனை ஆகியவையும், அவருக்கான தேவையின்மையோடு எளிமையாக இருப்பதுமே காரணம்.

✤ இளைஞர்களை வழிநடத்த வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

வழிநடத்துகிறேன் என்று கூறுபவர்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. விவேகானந்தர் சொல்கிறார் வழிநடத்த ஏராளமானோர் தேவை என்று. இளைஞர்கள்மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கை எதிர்காலத்தில் இந்தியாவைத் தூக்கி நிறுத்தும் தூண்களாக இளைஞர்களை மாற்றும். மாணவர்கள் அடிப்படையில் நல்ல வர்களாக இருக்கிறார்கள். அவர்களை வல்லமையுள்ளவர்களாகவும், தேசபக்தி உள்ளவர்களாகவும் மாற்றும் பொறுப்பு நம் கையில் உள்ளது. கடுமையாக முயற்சித்தால் கண்டிப்பாக கனவுகள் கைகூடும். ■

- சந்திப்பு : பாரதிகிருஷ்ணன்

- படங்கள் : தென்றல் நிலவன்



துன்பத்தைப் பொறுப்பதே துன்பத்தை வெல்வதற்கு வழியாகும்.

படிப்பகம்

www.padippakam.com

தொடர் – 9



## மனதில் பட்டதும் பதிந்ததும்...

# • நேரம்

- வன்னை தெய்வம், பிரான்ஸ்.

ஐரோப்பா வந்து ஆண்டுகள் பத்தை கழித்தவர்களில் கூட நேரத்தின் மகிமையை உணர்ந்தவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலராகவே இருக்கின்றார்கள்! நேரத்தை எப்படிக் கழிப்பது என்று கவலைப்பட்டுக் கொண்டு விளையாட்டுக் கிளப்புகளுக்கு போகிறார்கள். அடடா, இந்த வேலையை செய்வதற்கு இன்று நேரம் இல்லையே. நேரத்தை எப்படி மிச்சப்படுத்தலாம்! அப்படி சிறிது நேரம் கிடைத்தால் இந்த வேலையை முடித்துவிடலாமே! என்று நேரத்திற்காக ஏங்குபவர்களும் உண்டு.

இந்த இரு தரப்பினரும் அடுத்தவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் தங்கள் நேரத்தை செலவு செய்கின்றார்கள்! அல்லது மீதப் படுத்துகின்றார்கள்! ஆனால் வேறு சிலர் இருக்கின்றார்கள். இவர்கள் அடுத்தவர்களுடைய நேரத்தையே வீணடிப்பவர்கள்! ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு 'இந்த நேரத்தில் உங்களை சந்திக்கின்றேன்' என்று கூறிவிட்டு ஒரு மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியாலம் தாமதித்து வருவார்கள். தகவல் தொடர்பு வசதிகள் மிகவும் மலிந்த இந்த ஐரோப்பாவில் தம்மால் தாமதமாகத்தான் வர முடியும் என்பதனை தொலைபேசியில் அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் கூட அவர்களுக்கு வராததை எண்ணும்போது (மற்றவர்களின்) நேரத்தின் மகிமையை அறிவதற்கு இவர்களுக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் தேவைப்படும் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஒரு இடத்திற்குச் செல்வதற்கு அல்லது முக்கியமான ஆலோசனை கூட்டத்தை நடத்துவதற்கு, ஐந்து பேருக்கு ஒரு நேரத்தை குறிப்பிட்டுவிட்டு அரை மணிநேரம் தாமதாக வந்தால், அந்த ஐந்து பேரின் அரை மணி நேரத்தையம் சேர்த்து இரண்டரை மணி நேரத்தையல்லவா இவர்கள் வீணடித்துவிடுகின்றார்கள்! என்னவோ தெரியவில்லை, ஒரு சிலருக்கு இவர்கள் புறப்படும் நாளெல்லாம் வீதியில் தடை ஏற்படும் அல்லது ஏதாவது விபத்து ஏற்படும் (இப்படியான காரணங்களைத்தான் அதிகம் சொல்வார்கள்). கேட்டுக் கொள்ள வேண்டியது நமது கடமை ஆகிவிடுகின்றது.

'நேரம் பொன்னானது' என்று ஊரில் இவர்கள் 'மில்க் வைற்' வீதிக்கு வீதி எழுதி வைத்தபோதுதான் படிப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை. இங்கு நேரத்திற்காக தாங்கள் படும் கஷ்டத்தை நேரடியாக அனுபவித்த பின்பாவது அடுத்தவர்களின் நேரத்தின் பெறுமதியை தெரிந்து கொள்ளவில்லையே என்பதனை எண்ணும்போது கவலைப்படுவதை விட்டு வேதனைப்படத்தான் முடிகின்றது. நேரத்தின் மகிமையை இவர்கள்தான் புரிந்து கொள்ளா விட்டாலும் தங்களின் சந்ததிக்காவது இவர்கள் இதனை புரியவைக்க வேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் வரலாற்று தவறு செய்தவர்களாகிவிடுவார்கள்.

(தொடரும்)



நேற்றைய தோல்வி, இன்றைய முயற்சி, அதுவே நாளைய வெற்றி.

படிப்பகம்

www.padippakam.com

# • துளிப்பாவனம்

✤ மீசையைப் பார்த்தால்
மனைவிக்கு பயம்...
வீட்டில் கரப்பான் பூச்சி!

ஆ.சுரா. நெற்குன்றம்.

✤ கோடை இரவு
புலம் பெயர்கின்ற
பனை விசிறிகள்!

கன்னிக்கோவில் இராஜா,
சென்னை.

✤ பட்டாம்பூச்சிகள்
நத்தையாகின்றன
புத்தகச் சுமை....

ஆஸ்லாம்பாஷா, ஆம்பூர்.

✤ நிரம்பிவழியும் குளங்கள்
குப்பை கூளங்களாய்...
நகரமயமாதல்!

இரா.அ.தென்றல்நிலவன்,
திருச்சங்கோடு.

✤ பசித்துப் புசி
என்றார்கள்
பசியோடு நான்?...

க. காயத்ரி, புதுச்சேரி.

✤ உன் இமைக்கதவை
எப்போது திறப்பாய்
காத்திருக்கிறேன் காதலோடு...

தி. கவிமனோ, கடலூர்.

✤ எப்போதும்
கசகசப்பாகவே பேசுகிறார்
சர்க்கரை வியாபாரி!

சிவராச செல்வக்குமார்,
பூக்கொல்லை.

✤ ஆறடிதான் சொந்தம்
ஆனாலும் சண்டை....
சுடுகாட்டிலும் சாதி!

கற்பனைபித்தன், பெரம்பலூர்.

✤ குண்டுகள் அறிந்திருக்குமா?
செஞ்சோலைக் குழந்தைகளின்
மரண ஓலத்தை...

நந்தவனம் சந்திரசேகரன்.





உதிரம் உரையும் வரை போராடு, உனக்காகத்தான் இந்த விடியல் என்று எழு.

படிப்பகம்

www.padippakam.com

தொடர் – 9



# வியர்வையின் விருட்சம்

## தன்னம்பிக்கை

– கவிஞர் எஸ். பீர்முகம்து.

வாழ்க்கையில் ஜெயிப்பதற்கும் ஜொலிப்பதற்கும் தன்னம்பிக்கை மிக மிக அவசியம். தன்னம்பிக்கை கொண்டு சிகரம் தொட்டவர்களுடைய சரித்திர வரிகளோடு உறவு கொண்டு அவர்கள் சாயலைப்போல் நினைத்து தனக்குள்ளேயே வளர்க்க வேண்டும். நமக்கு தோல்வி ஏற்படும் என்ற நினைப்பிற்கே இடம் தராமல் தன்னம்பிக்கையின் நிலைப்பாட்டில் சந்தேகமோ, அச்சமோ ஏற்படுமாயின் நம்முடைய மனம் சோர்ந்து தளர்ந்துவிடும். நாம் எடுத்துக்கொண்ட காரியம் நிறைவேறும் வரையில் தன்னம்பிக்கையை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லாமே நன்றாக செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக ஏற்படும் இயற்கை சீற்றம், இடர்பாடுகள், வியாபார பாதிப்புகள், நம்மை நிலைகுலையச் செய்யும். இதுபோன்ற சூழ்நிலைகளில் அதிதமான துணிவும், தன்னம்பிக்கையும் தேவை. ஏனெனில் நம்முடைய புன்சிரிப்பு, சாந்தமான முகபாவங்களை வெளிப்படுத்துவதன் மூலமே நிலைமைகளைச் சரியாக சமாளிக்க முடியும்.

மிகச்சிறு படையை வைத்துக்கொண்டு ஒரு பெரிய வல்லரசை எதிர்க்கப் புறப்படும் இந்த டிகாலே ஒரு பைத்தியக்காரன் என்று நையாண்டி பேசின உலக வல்லரசுகள். சார்லஸ் டிக்காலே தன்னம்பிக்கையில் மிகவும் உறுதியானவர். பிரிட்டனோடும், அமெரிக்காவோடும் போர் ஒப்பந்தம் செய்து கொண்டு பாரிஸ் நோக்கிப் புறப்பட்டார். முப்படைத் தளபதியாக இருந்து அவர் வழிநடத்தி சென்ற நேசப்படையினர் 1944ல் பாரிஸ் நகரத்தில் நுழைந்து குண்டுமாரி பொழிந்தனர். பிரான்ஸ் வெற்றி பெற்றது. அந்த மகத்தான வெற்றிக்கு காரணமாயிருந்த சுதந்திர சிற்பிக்கு அந்நாட்டு மக்கள் தந்த பரிசு பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது தன்னம்பிக்கையில் உறுதி மிக முக்கியம். அதுதான் நம்முடைய சரித்திரத்தை வரையும் வல்லமை கொண்டது.

உங்களால் முடிந்ததை எப்படி அடைவது என்பதுதான் பிரச்சனையாக இருக்க வேண்டும். நெப்போலியனோ அல்லது ஆப்ரகாம் லிங்கனோ சாதிக்க முடிந்ததை நீங்கள் செய்ய வேண்டும் என்பதல்ல. ஆனால் உங்களால் என்ன செய்யமுடியும் என்பதில்தான் எல்லாமே அடங்கியிருக்கிறது.



விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதல்ல வெற்றி, விழித்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி.

படிப்பகம்

www.padippakam.com

அதே சமயம் உங்களுடைய தகுதியையும், திறமையையும் குறைத்து எடைபோட்டு நம்மால் எதுவும் சாதிக்க முடியாது என்ற விரக்தி மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். பணம், பதவி, உதவி, செல்வாக்கு முதலிய எந்த விதமான சிறப்பும் இல்லாத நிலையிலும் தங்களின் தன்னம்பிக்கை மூலம் விதியை மாற்றி அமைத்திருக்கிறார்கள் பல சாதனையாளர்கள்.

தினமும் பத்து ரூபாய் சம்பளத்தில் கூலியாக வேலை செய்த ராக்பெல்லர் இதுதான் தனக்கு விதிக்கப்பட்டவிதி என்று எண்ணாமல் தொடர்ந்து முயன்று தன் சக்தி மீது உறுதி கொண்டு தன்னம் பிக்கையுடன் செயல்பட்டு உலகத்திலேயே பெரும் பணக்காரராக உயர்ந்தார். இயந்திர தொழிற் சாலையில் பணியாளராக வேலை பார்த்துவந்த ஹென்றிபோர்டு மிகவும் ஏழ்மையில் இருந்தபோதிலும், எப்படியும் தன்னால் காரை உருவாக்க முடியும் என்று தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு மோட்டார் மன்னராக விளங்கினார்.

இளமைப் பருவத்தில் குதிரை லாயத்தில் வேலை செய்தும் மீன்பிடித்து விற்றும் வந்த ராம் ஜெமெக்டெனால்டு தன்னால் மிகஉயர்ந்த நிலையை அடைய முடியும் என்று உழைத்து இங்கிலாந்து நாட்டின் அமைச்சர் ஆனார். அதிசய மனிதர் என்ற பட்டம் பெற்ற ஜி.டி. நாயுடு மாதம் மூன்று ரூபாய் சம்பளத்தில் ஒட்டல் சர்வராக வேலைசெய்தவர். ஏழ்மைச் சூழ்நிலையும், வறுமையும் ஒருவருடைய முன்னேற் றத்திற்கு தடையாக இருக்காது. தன்னம்பிக்கையுடன் கஷ்டப்பட்டு உழைத்தால் உயர்ந்த நிலையை அடைய முடியும்.

வரலாறு உணர்த்தும் பாடத்தைப் போலவே நடைமுறைக் காலத்திலும் நம்மால் உயர முடியும். ஏனெனில் நிகழ்காலம் என்பது எழுச்சியின் காலம் அல்லது மாற்றத்தின் காலம் என்றே கூறலாம். வாழ்க்கை என்பது ஒருபோர்க்களம். அதைபோராடித்தான் ஜெயிக்க வேண்டும் என்பார்கள். வாழ்வதற்காகவே போராடுவதல்ல வாழ்க்கை. அவ்வாறு அமைந்தால் நாம் வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டே இருக்க வேண்டும். போதிய தன்னம்பிக்கை இல்லாதவர்கள்தான் வாழ்க்கையோடு நீண்ட நாட்கள் மல்லுக்கட்டிக்கொண்டே இருப்பார்கள். (தன் + நம்பிக்கை) தன்னம்பிக்கை முதலில் நம் மீது நம்பிக்கையும், இச்சமூகக் கட்டமைப்பு நமக்கு உணர்த்தும் தகவல் களையும் அனுபவங்களையும் வைத்துத் தான் வாழ்க்கையையே வெல்ல முடியும்.

நாற்பது வருஷங்கள் நடிச்சுட்டேன். எவ்வளவோ கஷ்டங்கள் வந்திருக்கு என் வாழ்க்கையில். ஆனால் அந்த சமயத்தில்கூட தன்னம்பிக்கையோடு இருந்து சமாளிச்சிருக்கேன். இன்றைக்கு இருக்கிற தலைமுறைக்கு தன்னம்பிக்கை கூடுதலாயிருக்கு. அதேசமயம் நம்மைப் பற்றி ரொம்ப உயர்வாகவும் நினைத்து விடக்கூடாது. வாழ்க்கையில் எவ்வளவோ நடக்குது. இதில் நாம் இடையில் வந்து போகிற ஒரு பக்கமே தவிர முக்கியமான பக்கமல்ல. இந்த கருத்து எப்பவும் என் மனசிலே இருக்கு. 'வெற்றி வேண்டுமா? போட்டுப்பாரடா' எதிர் நீச்சல் பாட்டை எதிரொலிக்கிற மாதிரி சொல்கிறார் நடிகர் நாகேஷ். ஆக்கப்பூர்வமான அணுகுமுறை வாழ்க்கை பற்றி சுய மதிப்பீடு கொண்டு தன்னம்பிக்கை யோடு போராடினால் நிச்சயம் வெற்றி பெறலாம் என தீர்க்கமாக நம்புங்கள்.

(தொடரும்)



முதலில் உலகத்தை நீ புரிந்து கொள் ; உலகம் தன்னால் உன்னை புரிந்து கொள்ளும்.

படிப்பகம்

www.padippakam.com

வெளிச்சம்



**"ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி" யில் முதுகலைப் பட்டப்படிப்புக்கு இங்கிலாந்து ரோஹெம்டன் பல்கலைக்கழக ஸ்காலர்ஷிப் ரூபாய் 21 லட்சம் திருமதி. சுலபா கருண் பெறுகிறார்.**

மும்பையில் செயல்பட்டுவரும் முன்னோடி தமிழ் அமைப்பான "இந்தியப் பேனா நண்பர் பேரவை" என்ற அரசு பதிவு பெற்ற சமூகநல அறக்கட்டளை மூலம் மும்பை, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள், கர்நாடகா மற்றும் சிங்கப்பூர், பிரான்சு, ஐக்கிய அரபு குடியரசு, சவூதியரேபியா ஆகிய இடங்களில் தமிழர்களை ஒருங்கிணைத்து சமூகப் பணியாற்றிவரும் பேரவையின் நிறுவனத் தலைவர் 'மனிதநேயமாமணி' எம். கருண் அவர்களின் துணைவியார் திருமதி. சுலபா கருண் அவர்கள் ஆகும். இவர் தமிழகத்தில் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்.

திருமதி. சுலபாகருண் அவர்கள் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதிலும், அவர்களுக்கு நடைமுறை வாழ்க்கைப் பழக்க வழக்கங்களைப் பற்றி தெளிவூட்டுவதிலும் சிறப்பு பெற்று விளங்குகிறார்.

பட்டதாரியான இவர் ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வியில் (Special Education) பட்டயமும் பெற்றுள்ளார். குறிப்பாக மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான துறையில் தனிப்பயிற்சி பெற்றுள்ள திருமதி. சுலபா கருண் அவர்கள் செம்பூரில் உள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஒரு கல்வி நிறுவனத்தில் தொழிற்பயிற்சி பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். இத்துறையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றும் இவரிடம் பயிற்சி பெற்ற மாணவர்களில் பலர் தன்னம்பிக்கையோடு தொழில் நிறுவனங்களில் பணியாற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1993-94 ஆம் ஆண்டு இங்கிலாந்து ஹெர்போட்ஷயர் பல்கலைக் கழகம் (Hertfordsshire University) மற்றும் லண்டன் பெண்கள் குழுமம் (London Womens' Council) இணைந்து வழங்கிய சுமார் 9 லட்சம் ரூபாய் கல்விச் செலவு (Scholarship) பெற்று ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வியில் பட்டப் படிப்பை லண்டனில் முடித்தார். அவ்வாண்டு இந்தியாவிலிருந்து அக்கல்விக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே மாணவி என்ற பெருமை இவருக்கு இருந்தது.

இவ்வாண்டும் (2006-2007) அதே துறையில் பட்டப் படிப்பிற்கு (MA Erasmus Mundus Special Education Needs) இங்கிலாந்து ரோஹெம்டன் பல்கலைக் கழகம் (Roehampton University) சுமார் 21 லட்சம் ரூபாய் (Euro - 36,100) கல்விச் செலவினை அவருக்கு அளிக்க முன்வந்துள்ளது. ஊனமுற்றோருக்கான முதுகலைப் பட்டம் அளிக்கும் இப்படிப்புக்கான வகுப்புகள் இங்கிலாந்து, நெதர்லாந்து, செக்கோஸ்லோ வேக்கியா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் நடைபெறுகிறது.



வெற்றி வேட்கை உள்ளவன் விழிகள் உறக்கத்திலும் விழித்திருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

தொடர் – 21



# விழிமின்! எழுமின்!!

– நந்தவனம் சந்திரசேகரன்.

சந்தோசத்திலேயே பெரிய சந்தோசம் மற்றவர்களை சந்தோசப்படுத்திப் பார்ப்பதுதானாம். பொன்னும், பொருளும் வாரி வாரி கொடுத்து நம்மை வருத்தி தியாகம் செய்துதான் மற்றவர்களை சந்தோசப்படுத்த வேண்டும் என்பதில்லை. மற்றவர்களை சந்தோசப்படுத்த எத்தனையோ வழிகள் இருக்கிறது. சகமனிதனின் திறமைகளைக் கண்டு விருப்பு வெறுப்பின்றி வார்த்தைகளால் பாராட்டினாலே போதும். அதுவே அவர்களுக்கு பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கும்.

ஆனால் சக மனிதனை மனம் திறந்து பாராட்டுவது என்பது அவ்வளவு எளிதில் நாம் செய்துவிடமாட்டோம். இது காலங்காலமாய் நமது குருதியோடு கலந்துவிட்ட ஒன்று. பாராட்டும் குணம் இல்லாததனாலேயே நம்மில் திறமையானவர்களை இழந்துகொண்டு இருக்கிறோம்.

மேல்நாடுகளில் ஒருவர் ஒரு புதிய கண்டு பிடிப்பையோ அல்லது ஏதாவது ஒரு சாதனையோ செய்தால் அவரை அனைவரும் எந்த ஒரு ஈகோவும் பார்க்காமல் பாராட்டுவார்கள். மேலும் அவர் நிறைய சாதனைகள் செய்ய வேண்டும் என்று வேண்டிய உதவிகள் செய்து கொடுப்பார்கள். அறிவியல் கண்டுபிடிப்பாளர்களையும் பல அறிஞர்களையும் பட்டியல் எடுத்தோமானால் மேல்நாடுகளில்தான் அதிகமாகக் காண முடிகிறது.

இங்கே நம்மிடம் பாராட்டும் குணமும் மற்றவர்களின் திறமையை மதிக்கும் குணமும் இல்லாமையினாலேயே, நீ பெரியவனா? நான் பெரியவனா? என்ற ஈகோ பிரச்சனையால் நிறைய வாய்ப்புகளையும் இழந்து கொண்டிருக்கிறோம்.

நம்மிடையே நிறைய சாதனையாளர்களும், திறமையாளர்களும் இருக்கிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு வரவேற்கத்தான் யாரும் முன்வருவதில்லை. அரசும் இவர்களைக் கண்டு கொள்வது இல்லை அரசு அதிகாரிகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வது இல்லை எங்கோ நூற்றில் ஒருசிலர்தான் வெளிச்சத்துக்கு வருகிறார்கள். அப்படியே ஒரு சாமான்யன் பல தடைகளைத் தாண்டி வரமுயற்சித்தாலும் சாதிய வர்ணாஸ்ரமம் அவனை முடக்கிவிடுகிறது.

நண்டுக்கதை ஒன்றை வேடிக்கையாக சொல்வார்கள். பல நாடுகள் நண்டு களை ஜாடிகளில் அடைத்து ஏற்றுமதி செய்தனராம். அதில் இந்தியாவில்



சொல்லின் தூய்மையும், செயலின் வலிமையுமே வெற்றியின் ஆளுமை.

படிப்பகம்

www.padippakam.com

இருந்து சென்ற ஜாடி மட்டும் மூடப் படாமல் இருந்ததாம். இப்படி இருந்தால் நண்டுகள் தப்பிவிடாதா என்று கேட்ட போது இந்திய நண்டுகள் தப்பிஓடாது. ஏனென்றால் ஒரு நண்டு மேலே ஏறினால் இன்னொரு நண்டு கீழே பிடித்து இழுத்துவிடும். இதனால் எந்த நண்டும் தப்பிக்க முடியாது ஏன்று வேடிக்கையாக சொல்வார்கள். இது நகைச்சுவை என்று இன்றும் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறோம். நம்மை நாமே இழிவுபடுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சிந்திப்பதே இல்லை.

எப்போதும் நாம் வேடிக்கைப் பார்த்தேப் பழக்கப்பட்டவர்கள். அதனால் தான் இன்னும் நாம் நமது சிந்தனைத்தளத்தை விரிவுபடுத்தாமல் வேடிக்கை மனிதர்களாகவே இருக்கிறோம்.

வல்லரசு இந்தியா என்றக் கனவை சுமந்தபடி செல்கின்ற இன்றைய சூழலில் இன்னும் நாம் வேடிக்கை மனிதர்களாக இருப்பது சரியா? என்று சிந்திக்க வேண்டும். நல்ல திறமையாளர்களுக்குச் சரியான அங்கிகாரமும் வாய்ப்புகளும் இல்லாததினாலேயே அவர்கள் வெளி நாடுகளில்போய் தங்களின் திறமையை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கி றார்கள். உலக அரங்கில் நாமும் உயர்ந்து நிற்க வேண்டுமானால் சக மனிதனின் திறமையை பாராட்டி மதிக்க வேண்டும். ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்க வேண்டும். இனியாவது நம்மைச்சுற்றி நடப்பவைப் பற்றி கூர்ந்து கவனிப்போம். திறமையா ளர்கள் எங்கிருந்து வந்தாலும் முதலில் அங்கீகரிப்போம். வளரும் தலை முறைக்கும் பாராட்டும் பண்பைக் கற்றுக் கொடுப்போம்.

(தொடரும்)

**நந்தவனம் கவிதைத் தொகுப்பு தயாராகி வருகிறது...**
**உங்கள் கவிதையை அனுப்பிவிட்டீர்களா...,!**

இனிய நந்தவனம் வெளியீடாக விரைவில் வெளிவர இருக்கும் கவிதைத் தொகுப்பில் நீங்களும் கலந்து கொள்ளலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

- நீங்கள் எழுதிய புதுக்கவிதை அல்லது மரபுக் கவிதை ஒன்று (24 வரிகளுக்குள்).
- கவிதையின் கரு முற்போக்கு சிந்தனை மற்றும் மக்கள் மேம்பாட்டு கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்.
- உங்கள் மார்பளவு புகைப்படம் ஒன்று (விரும்பினால்).
- கவிதை நூல் வெளியீட்டு பங்குத் தொகையாக ரூ. 100/- T. CHANDRASEKARAN என்ற பெயரில் M.O (or) D.D. ஆக அனுப்பவும். நூல் வெளியானவுடன், பங்கு கொள்ளும் அனைவருக்கும் நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.
- உங்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு அனுப்பவும். கடைசி தேதி : செப்டம்பர் 30-09-2006
- கவிதையும் பணமும் அனுப்ப வேண்டிய முகவரி :

இனிய நந்தவனம் மாத இதழ்,
எண்.5, புதுத்தெரு, CSI மருத்துவமனை எதிரில்,
உறையூர், திருச்சி 620 003. பேச : 94432 84823



உள்ளத்தூய்மை உன்னை மனிதனாக்கும், உடல் தூய்மை உன்னை வீரனாக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

## விடை வேண்டும்...

சம்பாதிக்க நினைக்கும்போது
சுகமனைத்தும் துறந்திடுவார்
சொத்தினைச் சேர்த்துப்பின்
சத்தினை இழந்திடுவார்
எதிர்பார்ப்பு எதிரிருக்க
எதிர்மறையாய் உடலிருக்க
புதிரான இன்பங்கள்
புதரான துன்பமாகிவிடும்!

நோய்ப்பட்ட நிலைவரின்
வாய்விட்டு அழுதிடுவார்
மூப்பது அணைக்கும்போது
காப்பது விலகிப்போகும்
தனிமையில் இனிமையில்லை
இனியது வாழ்க்கையுமில்லை!

நாலுறவு காத்திருக்கும்
நாளெண்ணிப் பார்த்திருக்கும்
அவரென்ற மரியாதையும்
அதுவென்று ஆகிவிடும்
இதயத்தில் வலியிருக்கும்
இதமான பதிலிருக்காது
அதிகார உரிமைகளும்
சதிராடிப் பார்ப்பதினால்
காவலுக்கு வைத்திடுவான்
இனி....?
எதற்கவர் வாழ வேண்டும்
அதற்குத்தான் விடைவேண்டும்!

திருச்சி சந்தர், மதுரை.

## இலவசம்...

இலவசமோ இலவசம்
எல்லாம் இங்கே இலவசம்!
இறைவனது படைப்பெல்லாம்
எல்லோருக்கும் இலவசம்!

காற்றுமழை இலவசம்
கதிரொளியும் இலவசம்!
போற்றிநீ அனுபவிக்கும்
பொருட்களெல்லாம் இலவசம்!

உன்னுழைப்பை எடுத்துநீ
ஊர்க்களித்தால் இலவசம்!
உன்னையே கொடுத்துதவு
உண்மையான இலவசம்!

நேற்று என்ன கொணர்ந்தனை
இன்றுகொண்டு போகவே!
முற்றும் நீ கொடுத்திடு
முதல்வனாகு இலவசம்!

தன்னையே கொடுப்பவர்க்குத்
தரணியெல்லாம் இலவசம்!
சிறியவீடு கொடுப்பவர்க்குப்
பெரியவீடு இலவசம்!

இலவசமாய்ப் பெற்றதை
இலவசமாய்க் கொடுத்திடு!
இல்லையென்று கொடுப்பதால்
இன்பவாழ்வு நிச்சயம்!

பொ. செல்வராஜ், விருதுநகர்.

✤ கவிவனம் ✤

## அங்கே என்ன நிலைமை...

மறந்து விட்டதாக
மனக் கணக்குப்
போட்டுப் போனேன்....

மனசு மட்டும்
செக்கு மாடாக
உன்னையே சுற்றிக் கொண்டு...

எறிந்து விட்டதாக
எக்காளம் செய்து
கொண்டேன் எனக்குள்....

முள்ளில் சிக்கிய
சேலையாக உன்
நினைவுகள் போகாதபடி....

தூரதூரப் போக எண்ணும்போது
உன் எண்ணங்கள்
தொண்டைக்கு குழிக்குள்
மீன் முள்ளாக....

தத்தளிக்கிறேன் - மறக்க
முடியாமல் - மறக்கச் சொன்னவளே!
அங்கெப்படி நிலைமையடி....

இரஜகை நிலவன், துபாய்.



எளிமை என்பது, ஏழ்மையல்ல. ஏழ்மை ஒருபோதும் இழிவுமல்ல.

படிப்பகம்

www.padippakam.com

## மாற்றங்கள் யாவும்...

தாமரை...
கிணற்றில் பூப்பதில்லை
தடாகத்தில்...
மல்லிகை மலர்வதில்லை
மாற்றங்கள் யாவும்
மனிதனில் மட்டும்...

பணம் இருப்பவனிடம்
மனம் இல்லை...
மனம் இருப்பவனிடம்
மனித நேயமில்லை...

சுற்றித்திரியும்
விலங்காய் இல்லாமல்

பூமிதனில்...
தியாகியாய் இல்லாவிடினும்
தீவிரவாதியாய் இல்லாமல்
மனிதனாய்... நல் மனிதனாய்
வாழக் கற்றுக் கொள்!

இயற்கையில் மாற்றமில்லை
மாற்றங்கள் யாவும்
மனிதனில் மட்டும்!!!

**சை.ஜெய்லானி, திருச்சி.**

## நடுத்தரம்...

காய்ச்சல் வரும்
சளி பிடிக்கும்
இப்படியாய்ச் சொல்கிறேன்..
ஐஸ்கிரீமிற்கு
அடம் பிடிக்கும் மகனிடம்...
மாசக் கடைசி என்பதைச்
சொல்ல மனமில்லாமல்!

**ஆசுரா, நெற்குன்றம்.**

## விமரைக்கூ....

- தன்னம்பிக்கை மனதின் விதை
மூட நம்பிக்கை முற்றுப் புள்ளியாக்கும்
அவை கறை மண்தோண்டி புதை..
- வெறிச்சோடி கிடக்கும் வீதி
அடுத்த நிமிடம் எங்கு வெடிக்குமோ
மக்கள் மனதில் பீதி....
- மணல் சுரக்கும் ஆறு
தொடர்ந்து கொள்ளைப் போனால்
சுடு காடாகும் பாரு....

**கன்னிக்கோவில் இராஜா, சென்னை.**

## கவின் சேர்க்கும் காலம்...

காலத்தை மதியானை இந்த ஞாலம்
கண்ணெடுத்தும் பார்க்காது; வாழ்க்கை என்னும்
கோலத்தை மாற்றுவதும் ஏற்றத் தாழ்வைக்
கோடிட்டுக் காட்டுவதும் காலம் ஒன்றே!
காலந்தான் போதவில்லை என்று சொல்லிக்
கடமையினைச் செய்பவனோ உயரு கின்றான்
காலந்தான் போகவில்லை என்று வீணே
கழிப்பவனோ ஏதுமின்றித் தாழு கின்றான்!

கழிகின்ற நொடிப்பொழுதும் திரும்பா தென்று
கணக்கிட்டு முனைப்போடு செயல்செய் வோன்தான்
வழியுயர்த்தும் சாதனைகள் படைத்துக் காலம்
வீழ்த்தாத புகழோடு திகழ்வான் நன்றாய்!
வழிபார்த்துக் காத்திருந்து வந்தபோது
வாய்ப்புதனை விட்டிடாமல் கொத்தும் கொக்காய்
விழிப்புடனே இல்லாதான் எதுவு மிங்கே
விளையாத களர்நிலம்போல் வெறுமை யாவான்!

நேற்றையநாள் உடைந்துபோன பானை ; நாளை
நேரில்லா மதிலின்மேல் பூனை ; இன்றோ
போற்றுகின்ற கையிலுள்ள வீணை தேனாய்ப்
பொழியுமிசை மீட்டுவோனே ஏற்றம் காண்பான்!
ஊற்றுவர நீரிறைக்க வேண்டும் நல்ல
உயர்வுவர உழைப்பீய வேண்டும் வீசும்
காற்றைப் போல் இயற்கை தந்த காலம் தன்னைக்
கண்ணாகப் பேணுவோனே வெற்றி காண்பான்!

**பாவலர் கருமலைத் தமிழாழன், ஒசூர்.**

## அழகின் எ(மி)ச்சம்...

அழகென்று அடையாளப்படுத்த
என்ன சிறப்பென எல்லோரும் கேட்கிறார்கள்....
அவர்களுக்குத் தெரிவதில்லைதான்
கண்களுக்குக் கீழிருக்கும் சுருக்கங்களும்,
முன்வரிசைப் பற்களில் ஒரு சொத்தைபல்லும்...
உழைத்து உரமேறிய உள்ளங்கைக் காய்ப்புகளும்
வெயிலில் வெடித்திருக்கும் கால் பாதங்களும்...
அழகென்று அர்த்தப்படுத்த
கபடமற்ற பேச்சும்
கணமும் விலகாத புன்னகையும்....

மிச்சமிருக்கிறது...
உண்மையில் அழகிங்கே எச்சமாயிருக்கிறது...

**பாரதிகிருஷ்ணன், திருச்சி.**



எது சரியோ அதை தெரிவிப்பதோடு, அதை அமுல்படுத்த வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



மடல்விடும் தூது

# இலக்கியம் மக்களுக்காகவே...

'கற்பகம்' என்னும் சஞ்சிகையின் சிறப்பாசிரியராக 1970களில் இலக்கிய உலகில் நுழைந்த த. சிவசுப்பிரமணியம் ஆரம்பகாலத்தில் எழுத்துத்துறையில் தீவிரமாக ஈடுபாடு காட்டினார். கற்பகம் ஈழத்து இலக்கியத்திற்கு ஏற்படுத்திய தாக்கம் விசாலமானது. பல எழுத்தாளர்களை எழுதத் தூண்டி அவர்களை இலக்கிய உலகம் கண்டறியும் வண்ணம் செய்த பங்களிப்பும் கற்பகத்தைச் சாரும். யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தில் செயலூக்க முகாமையாளராகக் கடமையாற்றிய காலத்தில் அந்நிறுவனத்தில் 'அர்சுனா' என்ற மாணவர் சஞ்சிகையில் 'குட்டிமாமா' என்ற தொடர் நவீனத்தை எழுதி மாணவர்களின் ஆவலைத் தூண்டியவர். பதிப்பகத் (அரச) திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராகக் பணியாற்றும் காலை 'தமிழ் தென்றல்' என்னும் மாணவ சஞ்சிகையின் ஆசிரியராகச் செயற்பட்டார். சிறுகதை, கட்டுரை, நூல் விமர்சனம் ஆகிய துறைகளில் தன் ஆளுமையை நிலை நிறுத்தி தினகரன், தினக்குரல் பத்திரிகைகளிலும் ஞானம், இனிய நந்தவனம் சஞ்சிகைகளிலும் தொடர்ந்து எழுதி வருகிறார். 'காலத்தால் மறையாத கற்பகம் இதழ் சிறுகதைகள்' 'கொக்கிகளாய் மாமி', 'பரிசுபெற்ற புதினம் சிறுகதைகள்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளிலே இவருடைய சிறுகதைகள் இடம் பிடித்துள்ளன. அமைதியாக இருந்து இலக்கியம் செய்பவர். எழுத்தாளர் த. சிவசுப்பிரமணியத்தை இனிய நந்தவனம் பேட்டிகண்டபோது அவர் கூறிய கருத்துக்களை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

✤ *உங்களைப் பற்றிய ஒரு சில வார்த்தைகள்?*

யாழ்ப்பாணம் இணுவில் என்ற கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான் எனது ஆரம்பக் கல்வியை இணுவில் சைவமகாஜனா வித்தியாசாலையில் பயின்று இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் தொடர்ந்தேன். இங்கு கல்வி பயிலும் காலத்தில் பேச்சுப் போட்டிகள் பலவற்றில் பங்குபெற்று பரிசில்கள் பெற்றுள்ளேன். அரசாங்க உத்தியோ கத்தில் வரி உத்தியோகத்தராகக் (Tax Officer)கடமையாற்றி 40 வயதில் இளைப்பாறிபின் மாலைதிவு அரசு நிறுவனத்தில் உதவிக் கணக்காள ராகப் பணியாற்றியுள்ளேன்.

✤ *உங்கள் எழுத்துலகப் பிரவேஷம் எப்பொழுது ஆரம்பம்?*

நான் கொழும்புக்கு அரச உத்தி யோகத்திற்கு 1967 இல் வந்தபின் கொழும்பிலிருந்து சில இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டி ருந்தன. இந்தியாவிலிருந்து 'தாமரை' சஞ்சிகையும் இங்கு வருகை தந்தது.



எது தீயதோ அதை கண்டுபிடிப்பதோடு, முறியடிக்கவும் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

அவற்றையெல்லாம் தவறாது வாங்கிப் படிப்பேன். நான் முதலில் படித்த நாவல் பார்த்த சாரதியின் 'குறிஞ்சி மலர்'. எனக்கு சரித்திர நாவல்களோ அல்லது துப்பறியும் கதைகளோ படிக்கும் எண்ணம் எள்ளளவும் இருக்கவில்லை. சமூக நாவல்கள், சிறுகதைகளை விரும்பிப் படிப்பேன். இதனால் நானும் எழுத வேண்டும் என்ற எண்ணம் வலுவடைந்து என் அலுவலக நண்பர்களின் உதவியுடன் 'கற்பகம்' சஞ்சிகையை வெளிக் கொணர்ந்தேன். நல்ல ஆதரவு கிடைத்தது. தொடர்ந்தும் கற்பகத்துடன் என்னை இணைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தேன்.

✤ *எத்தகைய எழுத்தாளர்களின் எழுத்துக் களை விரும்பி வாசித்தீர்கள்?*

டாக்டர் மு. வரதராஜனுடைய முழு நாவல்களையும் சொந்தமாக வாங்கிப் படிப்பேன். அடுத்து காண்டேகர் கதைகளை விரும்பிப் படிப்பேன். மார்க்சிம் கோக்கியின் தாய், நான் பயின்ற பல்கலைக் கழகங்கள் போன்ற பல நூல்களைத் தவறாது வாங்கி பலமுறை படித்தி ருக்கிறேன்.

✤ *இத்தகைய நூல்கள் உங்களை எவ்வாறு பாதித்தன?*

'தாய்' என்ற நூலைப் பலமுறை படித்திருக்கின்றேன். ஏழைத்தொழி லாளர்கள் படும் துயர துன்பங்கள், நிலப்பிரபுக்களின் அட்டூழியங்கள், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் என் மனதை பெரிதும் பாதித்துவிட்டன.

✤ *உங்கள் எழுத்துக்களின் போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டனவா?*

'இலக்கியம் மக்களுக்காகவே' என்ற பற்றுறுதியுடன் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக என் எழுத்துக்களும் நிலை நிறுத்தப் பட்டன. இதே காலப்பகுதியில் மார்க்சிய சிந்தனையின்பால் கவரப் பட்டு மார்க்சிய நூல்களைத் தேடிப் படிக்கலானேன். அதன் காரணமாக ஒரு தெளிவு ஏற்பட்டது. ஒரு உண்மை புலப்பட்டது.

✤ *மார்க்சிசம் ரஸ்சியா, சீனாவின் வீழ்ச்சியுடன் மங்கிவிட்டதாகச் சொல்லுகின்றார்களே! அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?...*

ஒரு சில நாடுகளோ அரசியல் தலைவர்களோ பணத்தாசையால் கொள்கையை விட்டுவிலகியிருக்கலாம். ஏகாதிபத்திய நாடுகளின் கைப் பொம்மைகளாக அவர்கள் மாறி இருக்கலாம். மார்க்சிசத்தை எவராலுமே என்றும் அழித்துவிட முடியாது. அது விஞ்ஞானத்தின் விஞ்ஞானம் என்று ஏங்கலஸ் கூறியிருக்கின்றார். கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ரோ 1959

## நந்தவனம் ஆசிரியர் சிறந்த இதழாசிரியராக தேர்வு........

சென்னையிலிருந்து வெளியாகும் 'முகம்' மாத இதழ் சார்பாக நடத்தப்படும் தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு சாதனை விழாவிற்காக தமிழ், தமிழர், தமிழ்நாடு, மனித நேய முன்னேற்றத்திற்காக பாடுபடும் இளம் சாதனையாளர்களை 16 துறைகளி லிருந்து 25 பேரை தேர்ந்தெடுத்து விருது வழங்க இருக்கிறார்கள். இதில் நந்தவனம் ஆசிரியர் த. சந்திரசேகரன் சிறந்த இதழாசிரியராக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



விதி என்பது கட்டளையல்ல.

படிப்பகம்

www.padippakam.com

தொடக்கம் நிறைகுடம் தளும்பாமல் இருக்கின்றார். லத்தின் அமெரிக்க நாடுகள் மீண்டும் மார்க்சிய வழிக்கு மக்களாலேயே திருப்பப்பட்டுவிட்டன.

✤ ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றி?...

தமிழ்நாட்டில் 'மணிக்கொடி' காலம் எப்படி எழுத்தாளர்களை உருவாக்கியதோ அதேபோல ஈழத்திலும் 'மறுமலர்ச்சி' காலம் முக்கியமானது. தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த 'சரஸ்வதி', 'தாமரை' ஆகிய தரமான இலக்கியச் சஞ்சிகைகளில் எமது நாட்டவர்களின் படைப்புகளும் வெளி வந்தன. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழகேசரி, சுதந்திரன் பத்திரிகைகள் பல எழுத்தாளர்களை உருவாக்கியன. ஈழத்து நவீன தமிழிலக்கியத்தின் பன்முகப் பரிமாணங்களை விளங்கிக் கொள்ளும் விதத்தில் பல நிலைகளில் கவனம் குவிக்க வேண்டியுள்ளது.

இதன் ஒரு நிலையாகவே 1950க்குப் பின்னர் ஈழத்து முற்போக்கு இடது சாரி இலக்கியம் முனைப்பாக வளர்ச்சி யடையத் தொடங்கியது. அப்பொழுது ஒரு தலைமுறை எழுத்தாளர்கள் படைப்பாளுமை, சமூக நோக்கு, மண்வாசனை, கலை நுட்பம், மொழி நடைச்சிறப்பு, தனித்துவம், வித்தியாசம் போன்ற அம்சங்களை உள்புகுத்தி தரமான இலக்கியங்கள் தோன்றலாயின. ஈழத்து இலக்கியம் வளர்ச்சி பெற்றது.

✤ ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களின் பங்களிப்புக்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்வீர்களா?

ஆம். அவர்கள் நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, திறனாய்வு என்று பல தளங்களில் முத்திரை பதித்து நின்றார்கள். இளங்கீரன், செ. கணேசலிங்கன், கே. டானியல் குறிப்பாக நாவல் துறையிலும், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், என்.கே.ரகுநாதன் சிறுகதையிலும், சில்லையூர் செல்வராஜன், முருகையன், எம்.ஏ.நுஃமான், ஏ. இக்பால், சுபத்திரன் ஆகியோர் கவிதைத் துறையிலும், அறிஞர் அ.முகம்மது சமும், பேராசிரியர் கைலாசபதி ஆகியோர் கட்டுரைத் துறையிலும் குறிப்பிடத்தக்க அளவு எழுதியுள் ளார்கள். பேராசிரியர் க. கைலாசபதி மார்க்சிய கண்ணோட்டத்தில் நின்று விமர்சனங்களைச் செய்தார். அவர் வழியில் நின்று தமிழ்நாட்டில் வானமாலை விமர்சனத்துறையை வளர்த்தார்.

✤ எழுத்தாளர்களைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

எழுத்தாளர்களுக்கு ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். தான் கொண்ட கொள்கையிலிருந்தும் மாறுபடாத வர்களாக அவர்கள் தம்மை நெறிப் படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு எழுத்தாளன் எதை எழுதுகிறானோ அதன்படி தனது வாழ்க்கையில் வாழ்ந்துகாட்ட வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் மக்களால் மதிக்கப் படுவார்கள். பட்டம் பதவிக்காக, பரிசில்களுக்காக, பொன்னாடை மாலை மரியாதைக்காக சில எழுத்தாளர்கள் நாயாய் அலைகி றார்கள். நம் நாட்டில் இது சர்வ சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. இத்தகையவர்களின் செயற்பாடு களில் எனக்கு எந்த உடன்பாடும் கிடையாது. தமிழ்நாட்டில் வாழுகின்ற வல்லிக்கண்ணன் ஆடம்பரமில்லாமல் எழுத்துலகை நேசித்தவர். ஜீவானந்தம் கொள்கைப் பற்றுறுதியுடன் கடைசி காலம்வரை ஒலைக்குடிசையிலேயே



உங்களை நம்புங்கள் ; நம்பிக்கையோடு விரும்பியதைப் பெறலாம்.

படிப்பகம்

www.padippakam.com

வாழ்ந்தவர். இத்தகையவர்களை உண்மையிலேயே நேசிக்கிறேன்.

❖ தமிழ் இலக்கிய உலகம் எதிர் காலத்தில் ஆரோக்கியமானதாக இருக்குமா?

சிந்திக்க வேண்டிய கேள்விதான். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இன்றைய இளம் சமுதாயத் தினரிடையே வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது. சினிமாவின் தாக்கம், தொலைக் காட்சி, இன்டர்நெட் போன்றவற்றில் கொண்டுள்ள மோகம் காரணமாக அவர்கள் வேறு திசையில் சென்று கொண்டிருக்கிறார்கள். உலக மயமாக்கல், பல்தேசியக் கொம்பனி களின் உள்பிரயோகம் உல்லாசப் பயணிகள் வருகை.. இத்தகைய காரணங்களால் பொருளாதாரக் கலாச்சாரச் சீரழிவுகள் வளர்முக நாடுகளைப் பற்றிக் கொண்டன. இளவட்டங்கள் போதைப் பொருள், பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவுகள் போன்ற வற்றிலும் பெரும் ஈடுபாடு காட்டி வருகின்றார்கள். இலக்கிய முயற்சிகள் தற்பொழுது ஆரோக்கியமாக இருந்த போதிலும், வருங்காலத்தில் அந்நாட்டு மொழிகளில் கல்வி பயிலும் சந்ததி யினரின் நிலைப்பாடு எப்படி அமையப் போகின்றது என்று எண்ணும்போது எதிர்காலம் கேள்விக் குறியாகவே அமைந்துள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் புதுமைப்பித்தன், மௌனி, அசோக மித்திரன், போன்றவர்களுடைய ஆளுமையை வருங்காலத்தவர் களிடமும் எதிர்பார்க்க முடியுமா? இலங்கையைப் பொறுத்த அளவில் மாணவ சமுதாயம் கடிவாளம் பூட்டிய நிலையில் கல்வியை மட்டுமே நோக்காகக் கொண்டு பாட சாலை, தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கி ஓடித் திரிகின்றார்கள். வாசிப்புக் கேற்ற சூழலும் இல்லை. நூல் நிலையங்களில் நூல்கள் இருந்த போதிலும் 'தேடல்' என்பது பூச்சிய மாகவே இருப்பதை நோக்குமிடத்து, தமிழ் இலக்கி வளர்ச்சி எவ்விதம் அமையப் போகின்றது என்ற ஒருவித ஏக்கம் மனதை வருடி நிற்கின்றது.

## தமிழ் மண்



ஈழதேசத்து இதயம்
இருதலைக்கொள்ளி எறும்பாய்...
'லப்டப்' என்று துடிப்பதற்கு
பதிலாய் 'டுமீல்-டுமீல்' என்று
குண்டு முழக்கங்களாய்...
பிய்த்தெரியப்பட்ட
குருதிக் குவியல்களாய்...

காற்றை சுவாசிக்கக்கூட
கடல்தாண்டி வரவேண்டிய அவலம்...
பிச்சைக்காரன் எச்சில்
இலைக்காய் தவிப்பதைபோல
எஞ்சிய உயிர்களை நெஞ்சின்
ஈரக்குழிக்குள் மறைத்துக் கொண்டு...

எப்படியோ வந்துவிட்டோம்
இந்தியாவிற்கு... நமது
பூர்வாங்க இருப்பிடத்திற்கு
என்ற இளைப்பாறுதலுடன்.
கரையிறங்கினால்....

முதலில் கைதி... பின்பு அகதி....

யாரடா அகதி...
தனியொருவனுக்கு உணவில்லையெனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்...
என்று பாடிய பாரதி பிறந்த
தமிழ் மண்ணில்....

ப.ம. சரவணன், திருச்சி.



மனமே உடலை ஆளும் ஆசான்.

படிப்பகம்

www.padippakam.com





டாக்டர். எம். அன்பரசன்
தமிழ் மூலிகை ஆராய்ச்சி நிபுணர்.

## இந்த மாத மூலிகை : அரச மரம்

அரசமரம் எல்லோரும் காணக்கூடிய, குளம், கோயில்கள் மற்றும் திருத்தலங்களில் அமைந்திருக்கும். குழந்தையில்லாதோர் அரசமரத்தைச் சுற்றிவரச் சொல்வார்கள். எதனால் என்றால் அரசமரத்தின் காற்றில் இருந்துவரும் மருத்துவத்தன்மையான காற்றானது பெண் கருப்பையில் உள்ள 'ஈஸ்ட்டேஷசன்' ஹார்மோன்களை தூண்டப்பெற்று கர்ப்பப்பையில் உள்ள கிருமிகள் மற்றும் தொற்றுத் தன்மைகள் எல்லாவற்றையும் அகற்றி குழந்தைப் பேற்றினை ஏற்படுத்துகிறது.

### மருத்துவப் பயன்கள் :

**இதன் எல்லா பாகமும் மருத்துவத் தன்மை கொண்டவை.**

1. இலையை நன்றாகக் காயவைத்து சூரணம் செய்து தினமும் அரை டீஸ்பூன் அளவு பாலில் இருநேரம் உண்டுவந்தால் கர்ப்பப்பை பிரச்சனைகள் நீங்கி குழந்தை உண்டாகும்.
2. மேலும் இதனுடைய இளம் தளிரை அரைத்து பசும்பாலில் உண்டுவந்தால் எப்படிப்பட்ட வயிற்றுப் புண்ணும் மூன்றுநாளில் மறைவது தெரியும். மேலும் இதன் தளிரை தயிரில் உண்டுவந்தால் ''இரத்தமூலம்'' குணமாகும்.
3. வெட்டுக்காயம், ஆறாத புண்கள், சீழ்பிடித்து புரைஒடிய புண்களுக்கு இதன் பட்டையை தூள் செய்து, தேங்காய் எண்ணையில் குழைத்துப் போட்டால் புண்கள் ஆறிவிடும். ''ஆன்டிபயாடிக்'' தன்மை கொண்டவை.
4. அரசமரத்தின் விதை விந்து உற்பத்தித் திறன் கொண்டவை. இழந்த ஆண்மைத் தன்மையை திரும்பக் கொடுக்கும் திறன் இந்த விதைக்கு உண்டு. இதனால் இதை (புத்திரஜீவி) என்றும் அழைப்பர்.
5. பெண்களுக்கு உண்டாகும் ''பெரும்பாட்டுக்கு'' அரசம்பட்டை, உதியன்பட்டை, நாவல் பட்டை எல்லாவற்றையும் சமமாக எடுத்து, தயிரில் சேர்த்து இடித்து சாறு பிழிந்து 100 மில்லி காலை, மாலை இருவேளை வெரும் வயிற்றில் கொடுத்தால் ''பெரும்பாடு'' நிவர்த்தியாகும்.
6. அரசமரத்தின் உலர்ந்த பழத்தைப் பொடி செய்து தினம் 5 கிராம் அளவு வெண்ணீர் அல்லது தேனில் கலந்து உண்டுவந்தால் சுவாசகாசம் (ஆஸ்துமா) குணமாகும்.
7. அரசமரப் பட்டையை பொடி செய்து அவற்றை வெண்ணீரில் கலந்து அருந்தினால் தீராத விக்கல் குணமாகும்.
8. இதன் வேர்ப்பட்டையை தண்ணீரில் கொதிக்க வைத்து அருந்தினால் வெட்டைச்சூடு, சொறி, திணவு (அரிப்பு), நீர் எரிச்சல், சிரங்கு போன்றவை மாறும் தன்மை கொண்டவை.
9. இதன் கொழுந்தை குடிநீராகப் பருகினால் சுரம் (காய்ச்சல்) குணமாகும்.



உடல் ஆரோக்கியம் உயர்வுகளின் ஆரம்பம்.

படிப்பகம்

www.padippakam.com

## நிகழ்வு



உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மதுரைக்கிளை சார்பாக நந்தவனம் வாசகர், கவிஞர் மஞ்சுளா எழுதிய 'இது தேனீர் காலம்' கவிதை நூல் வெளியீட்டு விழா 30.7.06ல் நடைபெற்றது. விழாவிற்கு உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தென் மண்டல அமைப்பாளர் திரு. திருச்சி சந்தர் தலைமை வகித்தார். எழுத்தாளர் இந்திரா சௌந்திரராஜன் நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். முனைவர் இரா. மோகன் நூலினை பெற்ற ஆய்வுரை நிகழ்த்தினார். எழுத்தாளர் ஹாமீம் முஸ்தபா முன்னிலை உரையாற்றினார். பேராசிரியர் எ.எம்.ஜேம்ஸ், காவல்துறை துணை கண்காணிப்பாளர் பேனா. மனோகரன், பட்டிமன்றப் பேச்சாளர் மூரா, கவிஞர்கள் செல்லா, அ. இராசகோபாலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். எழுத்தாளர் அ. நூர்ஜஹான் வரவேற்றார். கவிஞர் மலர்மகள் தொகுப்புரை செய்தார். நூலாசிரியர் மஞ்சுளா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டபின் ஏற்புரை நிகழ்த்தினார். கவிஞர் இரா. கணேசன் நன்றி கூறினார். உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மதுரைக் கிளை செயலர் கவிஞர் இரா. இரவி விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

## நூல் வெளியீட்டு விழா

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும், ஃபிடல் காஸ்ட்ரோ 80 ஆண்டு விழா குழுவும் இணைந்து காஸ்ட்ரோவின் 81வது பிறந்த நாளில் நூல் வெளியீட்டு விழா 3.9.2006 அன்று சென்னை தேவநாயப்பாவனர் நூலக அரங்கில் காலை 10 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது. மாலையில் நடந்த பொது நிகழ்ச்சியில் இந்திய இணை நிதியமைச்சர் பழனி மாணிக்கம் கியூபா நாட்டைச் சேர்ந்த அபிலார்தோ ஆர் கியூட்டோ சோஸா மற்றும் இடது சாரி இயக்கங்களின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


# சுயமுன்னேற்றப் பயிலரங்கம்

திருச்சி மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளையும்
திருச்சி தன்னம்பிக்கை வெற்றியாளர் வட்டமும் இணைந்து நடத்தும்
57வது சுயமுன்னேற்றப் பயிலரங்கம்

அனைவரும் வருக!
அனுமதி இலவசம்!!

நாள் : **17-09-2006**

**காலை 9.30 முதல் 1.30 மணிவரை**

இடம் : **ரவி மினி ஹால்,**

கரூர் பைபாஸ் சாலை, சத்திரம் பேருந்து நிலையம் அருகில், திருச்சி-2.

தலைப்பு : **தடைகளைத் தகர்ப்போம்**

பயிற்சி அளிப்பவர் : **JC. ம. திருவள்ளுவர்,**

மனிதவள மேம்பாட்டு பயிற்சியாளர்.

தொடர்புக்கு : தன்னம்பிக்கை லெனா, செல் : 98431 - 91648




மனதில் படிந்து கிடக்கும் சோர்வை விரட்ட, நம்பிக்கை ஒன்றே போதும்.

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# நிழலும் நிஜமும்

கோவை கோகுலன்

**கா**லை மணி ஆறு. அந்த முன்காலை அலங்கரிப்பில் ஆனைமுக கணபதி ஜொலித்துக் கொண்டிருந்தார். நெக்குறுக தரிசனம் செய்துவிட்டு, கந்தர்சஷ்டிக் கவசத்தை முனகிக் கொண்டே கோவிலைவிட்டு வெளியே வந்தேன். திடீரென நாலைந்துப் பிச்சைக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர்.

"அய்யா... சாமி... நேத்தையிலேர்ந்து பட்டினியாக் கெடக்கறேன், வயித்துப் பசிக்கு ஏதாச்சும் போடுங்க சாமி.... நீங்க மகராசனா இருக்கணும்" பிச்சைக்காரர்களின் தள்ளுமுள்ளுகளைத் தாண்டி, என்மீது விழாத குறையாக வந்து என்னை உரசிக் கொண்டிருந்தான் அந்த தடித்துக் கொழுத்தப் பிச்சைக்காரன்.

எனக்குள் கோபம் தகித்தது. அந்தப் பிச்சைக்காரனை ஓங்கி அறைந்தேன். "பொறுக்கி ராஸ்கல், என்ன திமிர் இருந்தா மேலவந்து விழுவே? ஏண்டா எருமை மாடுகளா, உங்களுக்கு பிச்சை எடுக்க வேற இடமா கிடைக்கல? ஏண்டா... ஆளப்பாத்தா பயில்வான் மாதிரி இருக்கே, உழைச்சி சாப்பிடறதுக்கு என்ன கேடு உனக்கு? இப்படி கேவலமாக பிச்சை எடுக்கறதுக்கு வெட்கமா இல்லே? த்தூ... துத்தேறி நாயி...." எரிச்சலில் கத்திவிட்டு புறப்பட முயன்றேன்.

"சாரே... அவசரத்துல தெரியாத்தனமா மேலவந்து மோதிட்டேன், இதுக்குப் போயி இப்படி கோவிச்சுக்கறையே. கிடக்கு விடு ராசா, வயித்துப் பசிக்கு ஏதாச்சும் குடுத்துட்டு போ சாமி... உனக்கு புண்ணியமா போகட்டும் ராசா!"

"அடி செருப்பால... அயோக்கியப் பயலே... உபதேசமா பண்றே, பாடுபட்டு சம்பாரிக்கிற காசுதாண்டா உடம்புல ஒட்டும். இப்படி தடிமாடு கணக்கா இருந்துட்டு பிச்சை எடுத்துப் பொழக்கறதுக்கு, பட்டினி கிடந்து செத்துப் போறது மேல். அடுத்தவங்ககிட்ட இருந்து ஒரு பைசாக்கூட இனாமா வாங்கக் கூடாது தெரியுமா?" அவசரமாக கத்தித் தீர்த்துவிட்டு கிளம்பினேன்.

ஓட்டலுக்குள் நுழையும்போது முதலாளி பிலுபிலுவென பிடித்துக் கொண்டார். "ஏம்பா... வாசுமணி, என்னாச்சு? நல்லா வியாபாரம் சூடு பிடிக்கற நேரத்துல இப்படி ஆடி அசைந்து, அம்மன் தேராட்டம் வர்றே? கொஞ்மாச்சும் பொறுப்பு இருக்கா உனக்கு? அங்கபார் ஹால்ல கூட்டம் நிரம்பி வழியுது, சப்ளைக்கு ஆளில்லாம உன்னோட நாலு டேபிளும்



உலகம் ஒரு நிலைக்கண்ணாடி, நாம் நகைத்தால் அதுவும் நகைக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

தூங்குது. உன்னால இன்னிக்கு ஏகப்பட்ட நஷ்டம். நாளையிலேர்ந்து ஒழுங்கா நேரத்துக்கு வந்தாகணும், மளமளன்னு போய் வேலையைப் பாரு.'' நாலு பேருக்கு மத்தியில் முதலாளி பொரிந்து தள்ளியதை நினைத்தால் அவமானம் என்னை பிடுங்கித் தின்றது. இந்த சமயத்தில் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் கோவில் வாசலில், அநாவசிய கோபத்தில் திட்டித் தாளித்துக் கொட்டிய அந்த பிச்சைக்காரனின் முகம் எனக்குள் நிழலாடியது.

இந்த ஓட்டலுக்கு சர்வர் வேலைக்கு வந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டது. ஏகப்பட்ட வியாபாரம், சம்பளத்துக்கு சமமாகச் சாப்பிட வருபவர்கள் தட்டில் விட்டுப் போகும் 'சில்லரைகள்' சேர்ந்துவிடும் கொழுத்த அந்த டிப்ஸ் வருமானத்தை எண்ணி, முதலாளியின் வசவுகளை வாங்கிக் கட்டிக்கொண்டு அவசரமாக உள்ளே ஓடினேன்.

மாலை நான்கு மணி... வழக்கம்போல் கூட்டம் குவியத் தொடங்கியதும், ஓட்டல் கலைகட்டத் துவங்கியது, நானும் தயாரானேன். நேரம் போவது தெரியாமல் சுறுசுறுப்பான இயக்கத்தால் சைடுபாக்கெட்டை டிப்ஸ் சில்லரைகளால் நிரப்பிக் கொண்டிருந்தேன். அப்போது நாலாம் நம்பெர் டேபிளில் வந்து உட்கார்ந்த அந்த மனிதனைப் பார்த்து அதிர்ந்து போனேன். காலையில் நான் பார்த்து, வசவுகளை வாங்கிக் கட்டிக் கொண்ட அதே பிச்சைக்காரன். கொஞ்சம் ஆடம்பரமாக தன்னை மாற்றிக் கொண்டு வந்து உட்கார்ந்தான்.

வெட்கமும், தயக்கமும் பிடுங்கித் தின்ன.... தயக்கத்தோடு நகர்ந்தேன். முதலாளி வேறு என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். ''சார், என்ன சாப்பிடறீங்க?'' வார்த்தைகளை மென்று விழுங்கினேன். அவனும் என்னை ஏளனமாகப் பார்த்துக் கொண்டே, ''என்ன சர்வர்சார்... சாப்பிட சூடா என்ன இருக்கு?'' எனக் கேட்க, கூனிக்குறுகிய நான் எந்திரத்தனமாக, வாயில் வந்ததைக் கொட்டித் தீர்த்தேன்.

அவனோ ஆர்டர் கொடுத்ததை அவசரமாக சாப்பிட்டுவிட்டு, வாஷ்பேசினில் கையைக் கழுவிக்கொண்டவன், திரும்பவந்து டேபிளில் உட்கார்ந்தான். உணர்ச்சிகளை வெளியே காட்டாமல் உள்ளுக்குள் பொருமிக்கொண்டே பில்லை தட்டில் வைத்துக் கொண்டுவந்து அவன் முன்னால் வைத்தேன். அவன் தனது அழுக்குப் பாக்கெட்டில் கையைவிட்டு ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து தட்டில் வைத்தான்.

நெளிந்தவாறே அந்த தட்டை எடுத்துப்போய் கல்லாவில் கொடுத்து மீதி சில்லரையை வாங்கிக் கொண்டுவந்து அவன் முன்னால் வைத்துவிட்டு நகர்ந்தேன். அடுத்த நிமிடம் தட்டிலிருந்த சில்லரையை அள்ளிக்கொண்டு ஒரே ஒரு ஐம்பது பைசா நாணயத்தை மட்டும் தட்டில் போட்டுவிட்டு என்னைப் பார்த்தான்.

எனக்குள் என்னையே நொந்துகொண்டு அவன் அருகில் போய் தட்டை எடுத்தேன். அவனோ என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டே... ''சர்வர்சார், இதுவும் ஒரு வகையில பிச்சைதான்'' என்று ஒற்றை வார்த்தையை உதிர்த்துவிட்டு மெதுவாக வெளியே நடந்தான். நெற்றிப்பொட்டில் பட்ட பயங்கர அடிபோல், பொறி கலங்கிப் போன நான் நடு கல்லாக நின்றிருந்தேன்.



தீய மனிதனும், அன்பினால் அடங்கி நடப்பான்.

படிப்பகம்

www.padippakam.com



## மனசு சுற்றிய மாவளி



பாவலர் வையவனின் மூன்றாவது தொகுதியாக 360 'நறுக்குகளாய்' வெளிவந்திருக்கும் ஹைக்கூ... கவிதை நூல் ''மனசு சுற்றிய மாவளி'' கவிஞர் தமிழேந்தியின் தீக்குச்சிகளின் தேவை என்ற தலைப்பில் எழுதியிருக்கும் அணிந்துரை நம்மை இன்றைய கவிதைப்போக்குக் குறித்து சிந்திக்க வைக்கிறது. ''எறும்புகள் தின்னும் யானை'' என்று பாவலர் வையவனின் கார்த்திகைப் பண்டிகையை விளக்கும் மாவளியின் சிறப்பு குறித்தும் தீபாவளி இன்று கொடுமையின் குறியீடு என்று கூறுகிறார். ''மனிதம் அடைந்து கிடக்கும் மாபெரும் சிறைச்சாலைகள் மதங்கள்'' என்ற கவிதையிலே மதங்களை அடையாளப்படுத்தி திரியும் மனிதர்களின் நிலை குறித்தும் ''இந்தியா கிராமங்களில் வாழ்கிறது, கிராமங்களில் வாழ்பவர்கள்தான் சாகிறார்கள்'' என்ற கவிதையிலும் உலகமயப் போட்டியில் ஊடக நோய்களுக்கு இரையாகி உலுத்துப் போயிருக்கிறது தேசம். அக்கரையோடு சிந்திக்கும் தமிழர்களுக்கு இன்னும் அதிகமாய் வேலையிருக்கிறது என்று தேசம் குறித்து தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். வெளியீடு : தமிழ்க்குடியரசு பதிப்பகம், 14/12, மியான்முதல்தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005. அலைபேசி : 944432190 விலை ரூ. 50.

## வெண்மைப் புரட்சி விளைவித்த வேதனைகள்



மருத்துவர் காசிபிச்சையின் பதினான்கு தலைப்புகளை கொண்டு வெளிவந்திருக்கும் நூல் ''வெண்மைப் புரட்சி விளைவித்த வேதனைகள்''. இந்நூலில் இயற்கையின் போக்குகளை உதாசீனப்படுத்தி மரபுவழி பராம்பரியத் தன்மையை கருத்தில் கொள்ளாமல் சராசரி 2 லிட்டர் பால்கொடுத்துவந்த பசுவை, அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தி 20 லிட்டர் பால் கொடுக்கும் திறன் படைத்ததாகச் செய்யும் செயற்கையான போக்கு மிகப்பெரிய தவறு என்று சாடுகிறார். தண்ணீர் வசதிஇருந்தால் 4 போகம் விளைச்சல் எடுக்க வைக்கும் மண்ணல்லவா நம்முடையது. நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும். இதற்குக்கூடவா அந்நிய ஆதிக்கம் வேண்டும் என்கிறார். மாட்டுப்பாலின் சுவை, தரம் மாட்டைப் பொறுத்து அமையாமல் கொடுக்கப்படும் தீவனத்தைப் பொறுத்து அமைகிறது. பால் மனிதருக்கான இயற்கை உணவே அல்ல, பிறப்பு முதல் இறப்புவரை மனிதர்களின் வாழ்வில் இன்றியமையாத பங்கு வகிக்கும் பாலினால் ஏற்படும் தீமைகளையும் மனிதனின் ஒவ்வொரு உள்ளுருப்பும் பாலினால் பாதிக்கப்படும் என்பதை விளக்கி நாடி நரம்புகளில் ஓடிப்பாயும் நச்சுப் பொருள்தான் பால் என நம்மை சிந்திக்க வைக்கிறார்.

வெளியீடு : அறவி வெளியீட்டகம், நடையனேரி, எரிச்சநத்தம் அஞ்சல், விருதுநகர் மாவட்டம். விலை ரூ. 25.

## துளிப்பா தோப்பு - முதுகில் நெளியும் மின்னல் - மலர மறுக்கும் மொட்டுக்கள்





பன்னிரெண்டு நூல்களை எழுதி, பல்வேறு விருதுகளைப் பெற்று, சமூக பிரதிபளிப்பை இலக்கிய நயத்தோடும், தன் சிந்தனை கண்ணோட்டத்தோடும் எழுதும் பாங்கு பெற்றவர். கவிமதி மரிய தெரெசா. அவரின் மூன்று தொகுதிகளில்... ''துளிப்பா தோப்பு'' ஹைக்கூ... கவிதை நூல் ''வாயிலே அகல்விளக்கு விரைவிலே நீ அணையும் விளக்கு சிகரெட்'' என்ற வரிகளும், ''குப்பைதொட்டி இங்கே துப்பாதீர் பிறந்த குழந்தை இருக்கலாம்'' என்ற கவிதையும்



சலிப்பின்றி உழைத்தலே சிகரங்களைத் தொட வழி.

படிப்பகம்

www.padippakam.com

ஒரு விழிப்புணர்வை தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது. ''முதுகில் நெளியும் மின்னல்'' சிறுகதைத் தொகுப்பு இச்சமூக நிகழ்வுகளை பதினைந்து தலைப்புகளில் சிறுகதைத் தொகுப்பாக அலங்கரித்து வெளியிட்டுள்ளார். ''மலர மறுக்கும் மொட்டுக்கள்'' கவிதை நூல், 'முக்கனிகளை அக்கினியில் எரித்தனர் முத்துக்கள் மூன்றினை முச்சந்தியில் எறிந்தனர்' என்ற தர்மபுரி அதர்மம் என்ற கவிதையும், 'செல்வமில்லாததால் செல்வியாகவே வாழ்க்கை' முதிர்கன்னி போன்ற 64 கவிதைகளைக் கொண்ட தொகுப்பாய் வெளியிட்டுள்ளார். வெளியீடு : தாய்மன் இலக்கியக் கழகம், 32-சோமசுந்தர விநாயகர் கோயில், 2வது தெரு, பெரம்பூர், சென்னை-600 011. தொலைபேசி : 26720920 **விலை ரூ. 25.**



## ராக்காச்சி பொம்மை

கிராமத்தின் சுவடுகளை நகரத்தில் தேடிக் களைக்கிற, நிகழ்வின் பதியன்களைத் தூவுகிற, முற்றிலும் பேச்சு நடையில் புறப்பட்டிருக்கிற புதிய வீச்சே செஞ்சி தமிழினியனின் 'ராக்காச்சி பொம்மை' கவிதைத் தொகுப்பு. இன்றைய அவசர யுகத்தில் ஓரறிவு, ஈரறிவு உயிர்களும் தன்னைப் பாதித்த விதம் பற்றிய கவிஞரின் பார்வை விசாலமானது. ஏதோவொரு பயணத்தின்போது கடந்து செல்கிற மாட்டுத் தொழுவங்களிலிருந்து வெளியேறும் அந்த வாசனை நெக்குறச் செய்வதுபோல இருக்கிறது, செஞ்சி தமிழினியனின் கவிதைகள்.



நவீனக் கவிதைகளின் தாக்கமில்லாத, ஆயினும் நுட்பமிக்கப் பதிவுகளை நூல் நெடுக அள்ளித் தெளித்திருக்கிறார். தும்பியின் பசியும், டி.வி.எஸ் 50ன் உதவியும் மனஉணர்வின் வெளிப்பாடும் இரவுப் பசியின் இயலாமையும், மறக்க இயலா மழைதினத்தையும் அனுபவித்துப் பார்க்க 'ராக்காச்சி பொம்மைக்குள்' உலா வரவேண்டியது அவசியமாகிறது. வெளியீடு : நறுமுகை, 29/35, தேசூர்பேட்டை, செஞ்சி-604 202, விழுப்புரம். **விலை ரூ. 35**

## மாணவர்கள் கல்வி கற்க உதவித்தொகை, கல்விக்கடன் பெறுவது எப்படி?

கல்வி என்பது வியாபாரமாக்கப்பட்ட இன்றைய நிலையில் கிராமப்புற மற்றும் ஏழை எளிய மாணவ, மாணவியருக்கு கல்வி என்பது எட்டாத கனியாக மாறிவிட்டது. பணம் உள்ளவனுக்குத்தான் படிப்பு என்ற இன்றைய சூழலில் உதவித்தொகை மூலம் கல்வி கற்க நமது அரசாங்கமும், பல தொண்டு நிறுவனங்களும் கல்விக்கான உதவித்தொகை வழங்கி ஏழை, எளிய மாணவர்கள் கல்வி கற்க உதவிவருகின்றன. இந்த உதவித்தொகையை யார்யார் வழங்குகிறார்கள். எப்படிப் பெறுவது போன்ற விளக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது. ''மாணவர்கள் கல்வி உதவித்தொகை கல்விக்கடன் பெறுவது எப்படி?'' என்ற நூல் மிக நீண்ட பட்டியலைத் தொகுத்து தந்துள்ள இந்நூலின் ஆசிரியர் அ. சரவணகுமார் அவர்களை அவசியம் பாராட்டியாக வேண்டும். வெளியீடு : கல்வி + வேலை வழிகாட்டி பதிப்பகம், 4/1411 (பழைய எண். 4/615) செந்தில்நாதன் தெரு தாசில்தார் நகர், மதுரை.625 020. **விலை ரூ. 25**




நூலாய்வு : **கவிஞர் பீர்முகம்மது, பாரதிகிருஷ்ணன்**



நல்லோர் நட்பு நன்மை தேரும்.

படிப்பகம்

www.padippakam.com



தலையங்கம் மனித நேயம் நல்ல சிந்தனையை விதைத்தது. தமிழருவி மணியன் நேர்காணல் நேர்த்தியாக இருந்தது. காமராஜர், அண்ணா போல இன்றைய அரசியல் தலைவர்களும் மாற வேண்டும் என்பதை உணர்த்தியது. டெனிஸ் தமிழர் தோழமைக் கழகம் கருத்து மட்டுமல்ல, உலகின் பரந்து வாழும் ஒவ்வொரு தமிழரின் கருத்தும் அதுவே.

**கவிஞர். இரா. இரவி, மதுரை.**

தமிழருவியின் நேர்காணல் சாரலில் இதயம் நனைந்தது. கவிவனத்தில் எதிர்க்காற்று கவிதை மூலம் அருபன் நல்ல காதலன் + கவிஞன் என்பதை நிரூபித்திருக்கிறார். கவிஞர் சுரதா பற்றிய செய்தி வெளியிட்டிருப்பது நம்மில் என்றென்றும் வாழும் ஒரு படைப்பாளிக்கு நாம் செய்யும் மரியாதை. மகளிர்க்கெனவும் ஒரு பக்கம் ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியவை.

**பா. இராஜா, சேலம்.**

அமைதியையும் மனித நேயமும் வளர ஓரணியில் திரண்டு நிற்க வேண்டும் என்ற ஆசிரியரின் கருத்து வாசகர்களாகிய எங்களுக்கும் மிகவும் ஏற்புடையதே. ஐயா தமிழருவி மணியன் அவர்களின் நேர்காணலில் பல விஷயங்களை வாசகர்களுக்கு கொண்டு சென்றது பாராட்டுக் குரியதே. துளிப்பாவனமும், கவிதை வனமும் மிகுந்த மணத்துடன் திகழ்ந்தது. அதில் புதுச்சேரி க. காயத்ரி, நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோரின் துளிப் பாக்கள் மிகவும் அருமை.

**கன்னிக்கோவில் இராஜா, சென்னை.**

சக மனிதர்களுடைய துயரைத் துடைப்பதே ஆன்மீகம். தமிழருவி மணியன் அவர்களின் நேர்காணல் ஆன்மீகம் என்றால் என்ன, அது எப்படிப் பட்டது என்பதை ஒரே வரியில் சொல்லியுள்ளது மிகவும் அருமை. எல்லோரையும் சமமாக நினைப்பது ஆன்மீகம் என்று சொன்னது சிந்திக்க வைத்தது.

**லால் சந்திரன், லால்குடி.**



# அசத்தலான நந்தவனம்

தமிழருவி மணியனின் மனம் திறந்த பேட்டி குற்றால அருவிச் சாரலைவிட குளுமையாக இருந்தது. அதேசமயம் சூடாகவும், சுவையாகவும் துணிச்சல் கலந்த எதார்த்தத்தின் பிரதிபலிப்பாகவும் இருந்தது. அருமையான பேட்டியை சிறப்பாகத் தொகுத்து வழங்கிய சகோதரி கவிஞர் பாரதி கிருஷ்ணனையும் பாராட்டுகிறேன்.

**கடல். நாகராஜன், கடலூர்.**

ஆகஸ்டு மாத நந்தவனத்தின் நுழைவாயிலில் மனிதர்களுக்கு மிகவும் பயன்பாடான செய்திகளை பசுமரத்தாணிபோல நெஞ்சில் பதிய வைத்தது. நாட்டில் மனிதனின் மனம்விட்ட சிரிப்பே, அம்மனிதனின் உயர்வையும் எண்ண மேம்பாட்டையும் வெளிப்படுத்தும் என்பதற்கு உதாரணமாய் தமிழருவியாரின் வஞ்சனையற்ற சிரிப்பு நந்தவனத்தின் சிறப்பு. நூல்கள்பால் கொண்ட பற்று வயது குறைந்ததால் நூலகருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கண்ணதாசன் நூல்களை படித்தார் என்ற செய்தி உள்ளபடியே நூலக நேயர்களை ஒட்டுமொத்த நெகிழ்ச்சிக்கு உட்படுத்தியது.

**சேர. சச்சிதானந்தன், நாமக்கல்.**

ஆகஸ்டு மாத இனிய நந்தவனம் இனிமையான நந்தவனமாக இருந்தது. மகளிர் மட்டும் கவிதைகள், துளிப்பாக்கள், தமிழருவி மணியன் பேட்டி என்று அசத்தலாய் இருந்தது.

**பரவை பாரதி, பறவாக்கோட்டை.**



முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள் ; கட்டளையிடும் காலம் தன்னால் வரும்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழருவி மணியன் அவர்களின் நேர்முகம் இதழுக்கு பெருமை சேர்த்தது. அரசியல், இலக்கியம், ஆன்மீகம் எனும் முப்பரிமாணங்களில் தன் அறிவார்ந்த சிந்தனையை அவர் வழங்கி வருவது சிறப்புக்குரியது. அவர் 'தமிழருவி' என்பதை புதுவைக் கம்பன் கலையரங்கில் பேசக்கண்டு, கேட்டு மெய்சிலிர்த்துப் போனேன். கண்ணதாசனை அவர் காதலித்தது போல் திரு. தமிழருவி அவர்களை நான் காதலித்து வருகிறேன். மீண்டும் அவரின் பேச்சினை கேட்கும் வாய்ப்பு கிடைக்காதா எனக் காத்திருக்கிறேன்.

**பாரதிவானர். சிவா, புதுவை.**

நேர்முகத்தில் தமிழருவி மணியன் கள்ளம் கபடமின்றி வெள்ளை உள்ளத்துடன் அள்ளித் தெளித்திருந்த கருத்துப் பொழிவனைத்தும் இளைய சமுதாயத்தை ஈடேற்ற உதவும் நல்விருந்தாய் இனித்தது. ஸ்டீபன் காக்கின்சின் உடலுறுப்புகள் ஒத்துழைக்க மறுத்தும், துவளாமல் மூளையின் துணையைக் கொண்டு சிந்தனையாற்றலை துடுப்பாக்கி, பல்கலைக் கழக ஆய்வெனும் தோனியை கரையேற்றியதும், வலக்கண் துணையை மட்டும் பெற்று வரலாறு படைத்ததும் அவருடைய முயற்சியுடனான தன்னம்பிக்கையின் வெற்றியே என்பது தெளிவாகத் தெரிந்தது. கவிஞர் சுரதாவின் வாழ்வோட்டக் கணிப்புக் குறிப்பில் அமரக்கவி படம் பி.யூ. சின்னப்பா நடித்தது என்பது தவறு. அது எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்தது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் நா. குணசேகரன், திருலோக்கி.**

**லண்டனிலிருந்து...**

நந்தவனம் ஒழுங்காகக் கிடைத்து வருகிறது. நன்றி! நல்ல விடயங்களை உலகளாவிய ரீதியில் வெளியிட்டு வருகிறீர்கள். பிரான்சிலிருந்து வண்ணை தெய்வம் எழுதிய விடயம் விழா நடத்துபவர்களைச் சிந்திக்க வைக்கும். விழா ஏற்பாட்டாளர்கள் நேரத்தோடு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டியது அவசியம். இந்தக் கருத்துக்கள் விழா ஏற்பாட்டாளர்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தினால் வரவேற்கத் தக்கது.

**ஐ.தி. சம்பந்தன்**
**சுடரொளி வெளியீட்டுக் கழகம், லண்டன்.**

## பர்மாத் தமிழ் அறிஞர் ஆசிரியருடன் சந்திப்பு

பர்மாவில் இயங்கிவரும் தமிழர் அறநெறிக் கழகத்தின் தலைவர் திரு.கோ. கலைச்செல்வன் அவர்கள் 21.8.2006 அன்று நந்தவனம் ஆசிரியரை நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து சிறப்புச்செய்து பர்மாவில் தமிழ்ப்பணி செய்துவருவது குறித்து நிறையத் தகவல்களை பரிமாறிக் கொண்டார்.

மக்கள் நெஞ்சினில் மனித நேயம் நிறைந்துள்ளது. தேவைப்படும்போது பொங்கி வழிகிறது என்பதை இரு நிகழ்ச்சிகள் மூலம் எடுத்துக் காட்டி மடிந்துவிடவில்லை மனித நேயம் என்பதை சுட்டிக்காட்டியுள்ளீர்கள். ஆன்மீகம் கடவுளைத் தொழும் பக்தி மட்டுமல்ல. பிறருக்கு உதவுவதே என்பதை தமிழருவியின் நேர்காணலில் அருமையாகக் காட்டியுள்ளீர்கள். இளைஞர்களின் மனதில் நம்பிக்கையூட்டும் கருத்துக்கள் நிறைத்து, வழிகாட்டுகிறது நந்தவனம்.

**பாவலர். கருமலைத்தமிழாழன், ஒசூர்.**

இனிய நந்தவனம் ஆகஸ்டு இதழ் கண்ணுற்றேன். சக மனிதருடைய துயரைத் துடைப்பதே ஆன்மீகம் நேர்காணலில் நனைந்தேன். நந்தவனத்தில் புதிய இயற்கை தமிழருவிகளின் இருப்பைக் காட்டி, இதயத்தைக் குளிர்விக்கின்றீர்கள்.

**போ. செல்வராஜ், விருதுநகர்.**

தமிழருவி மணியன் அவர்கள் சொன்ன சக மனிதனுடைய துயரைத் துடைப்பதே ஆன்மீகம் என்ற வரி மிகவும் பயனுள்ளதாய் இருந்தது.

**கவிஞர் திருமாவளவன்,**
**திருவெண்ணைநல்லூர்.**

**ஆண்டுச் சந்தா ரூ. 60 அனுப்பிவிட்டீர்களா?**



உற்சாகமாய் செயல்பட்டால், எந்த வேலையையும் சரியாக செய்து முடிக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com

# எழுத்தாளர்களும் பதிப்பகங்களும்

- வை. ஜவஹர் ஆறுமுகம்,
திருச்சி.

தமிழ்நாட்டில் இப்போதெல்லாம் ஏராளமான நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் வாசகர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 'தள்ளுபடி விற்பனை' என்ற பெயரில் மக்களை ஏமாற்றிக் கொள்ளை விலைக்கே விற்றுத் தீர்க்கும் ஜவுளிக்கடை வியாபாரிகளைப் போல, 'அட்சய' நாளில் நகை வாங்கினால் வீட்டில் செல்வம் கொழிக்கும் என்று பொய்ப்பிரச்சாரம் செய்து, நகைகளை விற்கும் நகைக் கடைக்காரர்கள் போல, உங்கள் பெயர் ராசிக்கேற்ற வைரங்களை அணிந்தால் வெற்றிகள் குவியும் என்று பித்தலாட்ட விளம்பரம் செய்யும் மோதிர வியாபாரிகள் போல பதிப்பக உரிமையாளர்களும் தள்ளுபடி விற்பனையில் அவ்வப்போது புத்தகக் கண்காட்சி நடத்தி லாபம் பார்த்து வருகிறார்கள்.

சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் 3 கோடி ரூபாய்க்கு மேல் புத்தகம் விற்கிறதாம். இப்போது எல்லா சிறு நகரங்களுக்கும் கண்காட்சியை விஸ்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களின் நிலைதான் பரிதாபம். எந்த எழுத்தாளரும் நூல் எழுதி லாபம் பார்த்ததில்லை. 15 ரூபாய் அடக்க விலையாகிற ஒரு நூலை 60 ரூபாய் விலைபோட்டு விற்கும் பதிப்பகத்தார் 10 சதவீதம் தள்ளுபடி என்று தாராளம் காட்டுகிறார்கள். ஆனால் அதை எழுதியவனுக்கு 10 சதவீதம்கூட வருமானம் கிடைப்பதில்லை. பல சிறிய எழுத்தாளர்கள் சிரமப்பட்டு, கடன் வாங்கி, பல மாதம் கண்விழித்து, தவமிருந்து வெளியிடும் நூல்களை முதலில்லாமலேயே வாங்கி அடுக்கிவைத்து விற்பனை செய்யும் பல புத்தகக்கடைக்காரர்கள் நூல்கள் விற்ற பிறகும், எழுதியவருக்குப் பணத்தை அனுப்புவதில்லை. வளர்ந்துவரும் வாசகர் சந்தையை புத்தக வெளியீட்டாளர்களும், புத்தகக் கடைக்காரர்களும் பயன்படுத்திக் கொண்டு லாபம் பார்க்கிறார்கள்.

ஜோதிடம், ராசிபலன், வியாபாரம் செய்வது எப்படி? (உழைக்காமலே) முன்னேறுவது எப்படி? இயற்கை மருத்துவம், வாஸ்து சாஸ்திரம், மணமக்கள் விற்பனை, ஆண்மை சக்தி பெறுவது எப்படி? என்பதுபோன்ற பாமர மக்களின் பலவீனத்தைப் பணமாக்கிக் கொள்ளும் நூல் வகைகளை பல பதிப்பகத்தார் தொழிலாகவே வெளியிட்டு வருகின்றனர். நோயுற்ற எழுத்தாளர்கள் உதவி கோரி பத்திரிகைகளில் வேண்டுகோள் விடுக்கும் அவல நிலை நீடித்துவருகிறது. இந்த நிலைக்கு திட்டமிடாத, ஒழுங்கற்ற அவர்களின் வாழ்க்கை முறையும் ஒரு காரணம் எனலாம். திருச்சியில் வலம்புரிஜான் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்த வழக்கறிஞர் எஸ். ஜெயராமனைச் சந்தித்தபோது நூல்கள் எழுதும் படைப்பாளிகளின் துயரத்தைப் போக்க வழியே இல்லையா? என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். மாவட்டந்தோறும் எழுத்தாளர் சங்கங்களின் உதவியுடன் நாமே ஏன் பதிப்பகங்களைத் துவங்கக் கூடாது? என்ற கேள்வியையும் அவரே எழுப்பினார். விற்பனைக்கான சந்தை முழுவதையும் பதிப்பகங்கள் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுதான் எழுத்தாளர்களின் இன்றைய ஏழ்மை நிலைக்குக் காரணம்.

இதனை உடைத்தெறிய, வெளிச்சமும் – காற்றும் படைப்பாளிகளின் மீது நேரடியாகப்பட வழக்கறிஞர் ஜெயராமனின் சிந்தனை துணை புரியலாம். இந்த இரும்புத் திரையின் பூட்டுகளைத் திறக்கிற முதல் களமாக திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த படைப்பாளிகளும், தமிழ் அமைப்புகளும் ஒருங்கிணைந்து ஒரு பதிப்பகத்தைத் துவங்கினால் இனிவரும் தலைமுறை நன்றி சொல்லும். இனிய நண்பர்களே சிந்திப்பீர்களா?



நாளைக்கு மகிழ்ச்சி வேண்டுமெனில் இன்று உண்மையாக இருங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# மகளிர்மட்டும்

## கறுப்பும் சிவப்பும் நீலமும்!!!

நெடுவான நீட்சியில்
கிறங்கிக் கொள்ள துடித்தாலும்
எச்சில் இலையில் சப்பித் துப்பிய
எலும்புகளுக்கான போட்டியில்
உலர்ந்துவிடுகிறது மனது...

பிறந்த பிஞ்சுகளுடன்
பிச்சை எடுக்கும் சோகமும்
சீழ் வடியும் கால்களுடன்
ஊர்ந்து திரியும் அவலமும்
மாறுவதாகத் தெரியவில்லை...

சாக்கடைகளின்
வெதும்பிய மணமும்
கொசுக்களும் மூளம்புகளும்
வீதியோர பத்து ரூபாய்க்கான
விபச்சாரங்களும்
இன்னும் என் தேசத்தின்
சொத்துக்கள் தான்...

நாய்களும், மாருதிகளும்
மனிதர்களுக்கு தெருவோரங்களுமாக
வாகனப் புகையின் தூசி படர்ந்த
கறுப்பு நிறமாகத்தான் இருக்கிறது
எங்கள் வறுமை...

போரின் செங்குருதி
சிந்தப்பட்டிருந்தும்
சுனாமியின் நீல அலைகள்
ஆக்கிரமித்திருந்தும்
கறுப்பு நிறமாகத்தான் இருக்கிறது
எங்கள் தேசம்...

இன்னும் அடர்ந்து படர்ந்து
கறுப்பு நிறமாகத்தான்
இருக்கிறது எங்கள் வறுமை....

சி. மாதுமை, சுவிட்சர்லாந்து.

## "தொலைந்தவை"

மனித இறுக்கங்களில்
மனம் புழுங்கிப்போய்
இற்ற இதயங்களின்
தாக்கத்தில் வலிப்பட்டு
ஓடிச் சலித்த எந்தன்
இதயக்கால்களுக்கு வலிக்கிறது...

பற்றுதல் அற்று
பாசம் மறந்து
வாழ்க்கைச் சக்கரத்தின்
படபடப்பான நிமிடங்களில்
நித்தமும் சிக்கிப் போய்...

கணினிகளுடன் மனிதனும்
கணினியாக மாறிப்போய்
இமயம் தொடலில்
இதயம் மறந்து போய்....
சேர்த்து வைத்த பணங்களை
எண்ணும்போதுதான்
நீங்கள் தோற்றுவிட்ட
வாழ்க்கை வலிக்கும்....

- ஆ. குமாரிலெட்சுமி, மதுரை.

## முகிலோ! வானமங்கையின் துகிலோ!

வெள்ளிப் பறவை கிழித்தது முகில்
தள்ளி அமர்ந்தேன் சாளரம் அருகில்
கொள்ளை அழகு வானம்! ஆகா!
வெள்ளிப் பனிமலையோ! வானில் என்
வெள்ளைக் கோழி இறகுப் போர்வையை
அள்ளிப் பிரித்து தூவியது யார்?

வாயுக் காதலன் வானமங்கை சேலையை
ஒளிக்கும் மாயச் சிருங்கார லீலையோ முகில்!
வாயுதேவன் மாளிகைத் திரைச் சேலைகள்
ஓய்வு வேளையில் இழுத்துச் சுருக்குகிறானோ!
தண்ணீர்த் தவம் ஜென்ம சாபல்யம் பெற்று
விண்ணில் விரிக்கும் வெண்குடையோ முகில்!

சூரியனில் பொறாமை கொள்ளும் வேளையில்
சூரியக் கதிரைச் சூறையாடிச் சுருட்டும்
சூரியனின் பெரும் எதிரியோ கருமுகில்?
முகிலும் முகிலும் முட்டி மத்தாளம் கொட்டி
வகிர்ந்திட நினைப்பது எதை? ஒளி பாய்ச்சி
வயிர ஊசியாய் மின்னல் தெறிப்பது ஏன்?

வேதா. இருங்காதிலகம், டென்மார்க்.



துணிந்துபோராடு, துயரங்கள் விலகி ஓடும்.

படிப்பகம்

லெணா பக்கம்



# முன்னேற்றப்பாதை முத்துக்கள்

## சவால்களை சந்திப்போமா?

இனிய நெஞ்சங்களே!

லெணாவின் இனிய நல்வணக்கம். மேலே குறிப்பிட்டுள்ள தலைப்பைப் படித்தவுடன் சற்றே மனதில் ஒரு சலனம் ஏற்பட்டிருக்கும். கேள்விகள் நம்மீது தொடுக்கும் போதே, பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு நம்மீது விழுகிறது. பொறுப்புகள் எடுத்துக் கொள்வது என்பதே சற்று சிரமமான காரியமாகப்படுகிறது. பொறுப்புகள் ஏற்காமல் அனுபவம் கிடைக்காது. அனுபவம் உதவுவதுபோல் நமக்கு யாரும் உதவ முடியாது. அனுபவமே வாழ்க்கை.

சரி, சவால்கள் நிறைந்த இந்த உலகில் நம்மிடம் உள்ள தடைகளை மீறி சாதிப்பவர்கள் தீவிரமாகச் சிந்திக்கிறார்கள். அவர்கள் வெற்றி பெற்றதை போல் நாமும் வெற்றிபெற, நாம் நிர்ணயித்துள்ள எல்லைகளை தாண்டி பயணம். இதோ சில வழிகள்....

1. பிறரோடு உங்களை எப்போதும் ஒப்பிடாதீர்கள், 2. ஒவ்வொரு மாதமும் உங்களின் பலம், பலவீனம், வாய்ப்பு ஆகியவற்றின் விகிதாச்சாரத்தைக் கணக்கிடுங்கள், 3. நீங்கள் நல்லவர், நல்லவற்றையே சிந்திக்கிறீர்கள் என்பதை மறவாதீர், 4. உங்களுடைய சாதனைகளை சந்தோசமாகக் கொண்டாடுங்கள். உங்கள் சாதனைகள் பெரியவை என நம்புங்கள், சின்ன சின்ன சாதனைகளில் நிறைவு பெறாதீர்கள், 6. வெற்றியை கனவு காணுங்கள். வெற்றியடைந்ததாகவே கனவு காணுங்கள், 7. உங்களை நீங்களே வெல்வதற்கு சபதம் செய்யுங்கள், 8. ஒவ்வொரு எதிர்மறை சிந்தனைக்கும் தலா ஐந்து நேர்மறை சிந்தனை மேற்கொள்ளுங்கள், 9. தவறுகளை ஒத்துக் கொள்ளுங்கள், மறுமுறை வராமலிருப்பதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துங்கள், 10. நிகழ்காலத்தில் வாழப் பழகுங்கள். என்ன நடந்தாலும் அடுத்த நிலையைப்பற்றி சிந்தியுங்கள்.

**வாழ்க்கை ஒரு விளையாட்டு - விளையாடுங்கள்**

**வாழ்க்கை ஒரு சவால் - சந்தியுங்கள்**

**வாழ்க்கை ஒரு வாய்ப்பு - அள்ளிக் கொள்ளுங்கள்.**

கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. படைப்புகளைத் திருத்தவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

Owned & Publisher : T. Chandrasekaran, No.8, Vellala Street, Woraiyur, Trichirappalli-620 003. Printed by : R. Ravichandran at New Chitra Printers, No.5, Mission Hospital Road, Woraiyur, Trichirappalli - 620 003. Editor : T. Chandrasekaran



திறமையிருப்பவனுக்கு வறுமை ஒருபோதும் தடையல்ல.

படிப்பகம்

www.padippakam.com


திருச்சி மாநகரின் மத்தியில்
சுவையான உணவு என்றவுடன்
உங்கள் நினைவிற்கு வருவது



# கற்பகம்

**ரெஸ்டாரெண்ட்**

குறைந்த விலையில் சுவைக்க
சாப்பாடு, டிபன், ஸ்வீட்ஸ் வகைகளுக்கு
சிறந்த உணவகம்


உரிமை **R. ராஜேந்திரன்**

113, மேலப்புலிவார்டு ரோடு, (தேவர்ஹால் எதிரில்)
திருச்சி - 620 008. போன் : 0431 - 2701489


படிப்பகம்

Licence Regd. No. SS Postal/TR-DN/27/2006-08/TR (INDIA) September 2006
Regd.No. SS Postal/TR/DN/28/2006-08/TR (Foreign)
"INIYA NANDAVANAM" TAMIL MONTHLY RNI No. TNTAM - 14613/2002

www.padippakam.com



ஸ்ரீ அகஸ்தியர் சுகர் நாடி ஜோதிட நிலையம்

அகஸ்தியர் நந்தீசர் போன்ற ரிஷிகளும் சித்தர்களும் தாம் அடைந்த ஞானத்தால் எழுதி வைத்த ஓலைச் சுவடிகளின் மூலமாக மனிதர்களின் வாழ்வில் நடக்கும் பலாபலன்களை எழுதித் தருகிறோம். கல்வி, குடும்பம், வருமானம், உடன் பிறப்புகளின் விபரம், வாகனம், வீடு, குழந்தைகள் பிறப்பு, இறப்பு, தாய்–தந்தையின் ஆயுள், திருமணம் அதன் காலம், ஆயுளின் விபரம், இடையில் ஏற்படும் கஷ்டம், செல்வம், குரு உபதேசம், தொழில்வியாபாரம், உத்யோகம், லாபம், இரண்டாவது திருமணம், வெளிநாட்டுப் பயணம், மோட்சம், ஞானம், பாவதோஷப் பரிகாரம், பில்லி, சூன்யம் நீக்கும் மந்திர முறைகள் யாவும் எழுதி கேசட்டில் பதிவு செய்து தருகிறோம். ஜாதகம் இல்லாதவர்களுக்கு ஜாதகம் எடுத்துத் தருகிறோம்.

வேறு எங்கும் கிளைகள் இல்லை

நாடி ஜோதிடர். A.A. தரணி பாலன்

15/3, E.V.R. ரோடு, சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் பின்புறம்,
புத்தூர், திருச்சி - 620 017. போன் : 0431-2771868
செல் : 98424 20004



படிப்பகம்